ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

அகஸ்தியமகாமுனிவர்

அருளிச்செய்த

குருநாடிசாஸ்திரம்

இருநூற்றுமுப்பத்தைந்து

இஃது

மணிமங்கலம்,

வடிவேலுமுதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டு,

மதுரை புதுமண்டபம் புத்தகஷாப்

பி. நா. சி. கடைகாரியம்,

எம் கிருஷ்ணப்பிள்ளை யவர்களால்

பிடாரித்தாங்கல்,

நாராயணசாமிமுதலியார்குமாரர்

சிதம்பரமுதலியாரவர்களது

சென்னை

வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1914.

சென்னை பிரம்பூர் குயப்பேட்டை 65-வது-கெம்பர்வீதி.

கடவுள் துணை.

அகஸ்தியமகாமுனிவர் அருளிச்செய்த
குருநாடிசாஸ்திரம்
இருநூற்றுமுப்பத்தைந்து.

காப்பு.

ஓங்காரங்கொண்டெழுந்து பிரணவத்தின்செய்கை
யுற்றமிகச்சூத்திரமா யுரைத்தவாறு
ஆங்காரங்கொண்டதோர் மனதைத்தேர்ந்து
அறிவுருவசொரூபமென்று மாந்தர்நேர்மை
பாங்கான நாடிநரம் பானவாறு
பழமறைதானாராய்ந்து பாடிவைத்தேன்
நீங்காதகணபதியுங் கந்தன்றானும்
நிசமாகவந்துதவுங் காப்புத்தானே. (௧)

தானானநாடிநரம் பானசெய்கை
தாரணியில்மானிடர்செய் தர்மகர்மம்
ஊனானவுடலுயிராய்த் தேகமான
வுரையறிந்துவுதித்துநின்ற வுண்மைக்கியானம்
வானானநாடிவகைக் கெல்லாந்தன்னில்
வளம்பெறவேயொருநாடி மார்க்கங்கண்டு
தேனான்குருநாடி மார்க்கங்கண்டு
தேவிமுதல்சிவனுடனே தெளிந்தகாப்பே. (௨)

வேறு.

சீர்பெறுமுனிவர்வேதந் தெளிந்துபின்னுலகத்தோர்கள்
பேர்பெறுங்கருவிலுற்ற பிணிபலவுணர்ந்துதோய்ந்து
ஊர்பலநாடிக்கெல்லா முயர்பெருநாடிமூன்றில்
சேர்குருநாடிநேர்மை செயலுடன்கூறலுற்றேன். (௩)

உற்றிடுநாடிமூன்றி லுயர்நிலைக்குருவைப்பற்றி
நற்றிடுநரம்பின்செய்கை நன்மணிதாக்குப்போலே
பற்றிடுஞ்சுழினைதாக்கிப் பதிபசுபாசத்துற்று
மற்றுள்ளமண்டலங்கள் மூன்றையுமருவிநீளும். (௪)

பூமிதுவேநோய்களெல்லாம் பூண்டுக்கொண்டு
புகுந்துணர்ந்துபிறப்பிறப்பு பூணுங்காயம்
நாமிதுவேகருக்குருவு முவந்தநேர்மை
நாடறியவல்லார்க்கும நவிலறவாறே. (௨௭)

வாறுகேள்முன்வினை செய்கைதானும்
வகைவிபரமுனசெய்த கன்மத்தாலே
கூறுடனேயெறிகலையூற் கிருமியாலும்
கொஞ்சியதுவாயுவுடன் கலைத்திரவிமீறி
வீறுடனேவெட்டையினாற் பசியினாலும்
வேறுடனேகர்ப்பமது வழிந்துபோகும்
வாறுடனேயெல்லீருங் கர்மத்தாலே
வந்தவகையிதுவென்ன வகுத்தார்தாமே. (௨௮)

தானங்கேசுக்கிலந்தா னறுகுநுனிப்பனிபோல்
தங்கியதுபதினைந்தில் பலத்துக்காணும்
ஏனங்கேயிருபத்து ஐந்தாநாளில்
இயல்புடனோர்திங்கள்தனிற் றலையுண்டாகும்
வானங்கேரண்டுதிங்க ணிற்றுமுடிவாகும
வளர்மூன்றுதிங்கள்கை காலுண்டாகும்
வேனங்கேயைந்தாறில் விரல்நகங்களதோன்றும்
வேதாந்தம்பிண்டம்வளர் விபரமதுதானே. (௨௯)

தானேதானன்னையுண்ட வன்னமுந்தண்ணீருஞ்
சாந்தமாய்த்தொப்புள்கொடி யூடேபுக்கி
பானரசவமுதமெனச் சேயுந்தோற்றும்
பாங்குடனேழாமாதங் குடலுதிரஞ்சேரும்
மானேகேளிந்தவகை வளர்த்தியான
வகைவிபரநன்றாக மானிடர்க்கு
வானவர்கள்முனிதேவர் கிருபையாலே
மதலையுருவானவகை மாதஞ்சேரே. (௩௰)

வேறு.

சேருமேபெட்டாமாதந் திறமுடன்சிறந்துமோதி
ஊருமேயுண்பதானு லுள்ளறிவுண்டாமப்பால்
காருமேயொன்பதாநுற் கருணையாம்பத்தில்நாடும்
தேருமேபத்தாமாதம் பூமியிற்சிறுழுதுவீழும். (௩௧)

தொழுதுடன்வீழ்ந்தபோது தத்துவந்தொண்ணூற்றாறு
முழுதுடன்பாக்கையாகி முற்றுமேசரம்புநாடி.

Library copy lacks p. 3-6.

பழுவுறுதசைபெலும்புத் தாதுவும்பதிவாபொத்து
கொளுமதுதேகந்தன்னிற் கூறுநானுரைக்கக்கேளே. (௩௨)

நாடிநிலையறிய.

கோட்டிடுநாடிதானு மிருநூற்றுநாற்பத்தைந்தில்
நாட்டிடுநாடிபத்து நயம்பெறுமேழுதானு
மூட்டிடுபஞ்சநாடி முற்றமேபார்க்கும்போது
சாட்டிடுநாடிதானு மூன்றெனச்சாற்றலாமே. (௩௩)

சாற்றுமேறனிலைபேவாதம் பிங்கலைபித்தமாகும்
தேற்றுமேறன்சுழினைதானுஞ் சிலேத்பனமென்னலாகும்
மாற்றுமேலன்வலமேவாதம் வளர்ந்திடும்பித்தந்தீயாம்
போற்றுமேறிணையந்தண்ணீர் பொருந்திடும்பானன்வாதம். (௩௪)

வாதமொன்றுரைத்தபின்பு மருவியபிராணன்பித்தம்
சாதமென்றுரைத்தசிலேத்பனஞ் சமானனுநோயதாகும்
போதமென்றவர்கள்மூன்று லாக்கவுமழிக்கலாகும்
வேதமென்றுரைத்தசெய்கை விளம்பினேன்புவியில்மாதே. (௩௫)

மாதவர்முனிவர்தேவர் வளர்ந்திடும்வானத்தோர்கள்
வேதவர்பத்தர்சித்த ரிருடிகண்மேல்நோய்சாராது
பூதகர்பிறவியெல்லா நோய்தணிந்தழுந்திமாள்வார்
காதலால்யோனிபாசைத் திமையாலிறப்பர்தாமே. (௩௬)

காமதுசுவைகளாகுந் தருக்கியபோகத்தாலும்
[illegible]மதுபிறந்திறந்து புகுந்திடுவோய்க்கூட்டுக்குள்ளே
சோமதுகாமத்தாலே செனித்திடும்பிண்டசென்மம்
காமிதுவறியச்சொன்னே நாமுநீதெளிந்துமாதே. (௩௭)

சேறுவீர்கற்பங்கொண்டு சிதம்பரபூசைசெய்து
தாறுநீசத்திபூசை பைரவவீரவாகு
வேறுநீகணேசன்கந்தன் சிறப்புடனிவர்கள்பூசை
வேறுகேளுரைத்தமுன்னூ லாய்ந்துமேசெய்யநன்றே. (௩௮)

சசச௮-வியாதி தொகுப்புப்பெயர்கள்.

கன்றெனவியாதிதானு நவிலுமேறுகமத்தில்
குன்றெனவளர்ந்தநோய்கள் சகலமுந்தொகையாய்ச்சொல்வேன்
அன்றெனவெழுந்தநாடி யெழுபத்திராயிரந்தான்
கன்றெனநாடிபத்துக் கருத்துறுமேழுகாது. (௩௯)

தாதுவேபஞ்சபூத மதிலுறுநாடிமூன்று
கோதறுகுருவாநாடி குறிப்புடன்மேவிநின்று
தாதுறுசத்தத்தாது தசைநரம்பெலும்புதானும்
வேதுறுரோமமச்சை சுக்கிலநெய்யாம்பித்தம். (௪௰)

பித்தநாற்பத்துநான்கு பெருவயிறெட்டதாகும்
உற்றதோர்பீலியெட்டு மோசியமூன்றதாகு
மெத்தவேசிலேற்பனந்தான் மிகுத்திடுந்தொண்ணூற்றாறு
மற்றுமேவாதரோகம் வகையுமெண்பத்துநாலே. (௪௧)

சன்னியும்பதினெட்டாகுந் தாஞ்வலிநேத்திரந்தான்
உன்னியதொண்ணூற்றாறு முழுவையுமூன்றதாகு
மின்னிபக்கசூலை மேவிடுமேழதாகும்
சென்னியில்வீக்கந்தானுஞ் சேர்ந்திடுமைந்துதானே. (௪௨)

பிளவையில்சிலந்திதானும் பெருந்துடைணம்பதாகும்
அளவிலாச்சுரமேகேளு வறுபத்துநாலதாகும்
களமிகப்படுத்தும்பாண்டு தானுமேயஞ்சதாகும்
இளகியகுன்மமெட்டு மேந்தியவிக்கலாமே. (௪௩)

இந்திரகோபதோஷ மிருபதுமெழுபத்தாறும்
அந்திரவாயுதங்கை யாயிரத்தெட்டேயாகும்
தந்திரப்பார்வைதோஷந் தானுமேநூறதாகும்
மந்திரக்குமிழியெட்டு மகோதரமீரெட்டாமே. (௪௪)

படுவன்முப்பத்திரண்டு பருவொருநாற்பத்தொன்று
முடுகிடும்விஷபமாறு முற்றுமேமவுசிமூன்றுந்
திடுகிடும்பீலிமூன்று சிரசினிற்சிலந்திசொல்லில்
கடுகிடுமைம்பத்தாறு கரப்பானுமெண்பத்தைந்தே. (௪௫)

திருக்குநோயென்பதாகுந் திரளும்விப்புருதியததாம்
மருக்கவேகிராமணிதோஷ மாறுமேயிருத்தொன்று
மிருக்கிடும்பிளவைதானு மேழெனுமிவையேசொல்லில்
கருக்கிந்ததோஷந்தானுங் கர்ணுமேநாற்பத்தாறே. (௪௬)

குட்டமும்பதினெட்டாகுங் குறைநோவுமெட்டதாகும்
திட்டமாஞ்சூலையெட்டுச் சித்தியலாறதாகுந்
தட்டுசீரிறிவுசொன்னேந் தானுமேயிருபத்தொன்றும்
சிட்டமாம்விஷயமைந்துஞ் சேருங்காமாலையாறே. (௪௭)

மேகமுமிருபத்தொன்று மிகுயோனிச்சூலையெட்டுந்
தாகமுமார்பதாகுந் தனிரத்தபித்தமூன்றுஞ்

2

பழுவுறுதசைபெலும்புத் தாதுவும்பதிவாயொத்து
கொளுமதுதேகந்தன்னிற் கூறுநாலுரைக்கக்கேளே. (௩௨)

நாடிநிலையறிய.

கோட்டிடுநாடிதானு மிருநூற்றுநாற்பத்தைந்தில்
நாட்டிடுநாடிபத்து நயம்பெறுமேழுதானு
மூட்டிடுபஞ்சநாடி முற்றமேபார்க்கும்போது
சாட்டிடுநாடிதானு மூன்றெனச்சாற்றலாமே. (௩௩)

சாற்றுமேறனிலையேவாதம் பிங்கலைபித்தமாகும்
தேற்றுமேறன்சுழிமுனைதானுஞ் சிலேற்பனமென்னலாகும்
மாற்றலேன்வலமேவாதம் வளர்ந்திடும்பித்தந்தியங்கும்
போற்றுமேனையந்தண்ணீர் பொருந்திடும்பானன்வாதம். (௩௪)

வாதமொன்றுரைத்தபின்பு மருவியபிராணன்பித்தம்
சாதமென்றுரைத்தசிலேத்பனஞ் சமானனுமேநோபதாகும்
போதமென்றவர்கள்மூன்று லாக்கவுமழிக்கலாகும்
வேதமென்றுரைத்தசெய்கை விளம்பினேன்புவியில்மாதே. (௩௫)

மாதவர்முனிவர்தேவர் வளர்ந்திடும்வானத்தோர்கள்
வேதவர்பத்தர்சித்த ரிருடிகண்மேல்நோய்சாராது
பூதகர்பிறவியெல்லா நோய்தணிந்தழுந்திமாள்வார்
காதலால்யோனிபூசைத் தீமையாலிறப்பர்தாமே. (௩௬)

தாமதுசுவைகளாகுந் தருக்கியபோகத்தாலும்
சோமதுபிறந்திறந்து புகுந்திடுவாய்க்கூட்டுக்குள்ளே
சோமதுகாமத்தாலே செனித்திடும்பிண்டசென்மம்
நாமிதுவறியச்சொன்னே னாயுநீதெளிந்துமேதே. (௩௭)

சேறுவிர்கற்பங்கொண்டு சிதம்பரபூசைசெய்து
தாறுநீசத்திபூசை வைரவவவீரவாகு
வேறுநீகணேசன்கந்தன் சிறப்புடனிவர்கள்பூசை
வேறுகேளுரைத்தமுன்னூ லர்ப்பதுமேசெய்பநன்றே. (௩௮)

௪௪௪௮-வியாதி தொகுப்புப்பெயர்கள்.

நன்றெனவியாதிதானு நவிலுறேனுகமத்தில்
குன்றெனவளர்ந்தநோய்கள் சகலமுந்தொகையாய்ச்சொல்வேன்
அன்றெனவெழுந்தநாடி யெழுபத்திராயிரந்தான்
நன்றெனநாடிபத்துக் கருத்துறுமேழுகாலு. (௩௯)

தாதுவேபஞ்சபூத மதிலுறுநாடிமூன்று
கோதறுகுருவாநாடி குறிப்புடன்மேவிநின்று
தாதுறுசத்தத்தாது தசைநரம்பெலும்புதானும்
வேதுறுரோமமச்சை சுக்கிலமெய்யாம்பித்தம். (௪௰)

பித்தநாற்பத்துநான்கு பெருவயிறெட்டதாகும்
உற்றதோர்பிலியெட்டு மோசியமூன்றதாகு
மெத்தவேசிலேற்பனந்தான் மிகுத்திடுந்தொண்ணூற்றாறு
மற்றமேவாதரோகம் வகையுமெண்பத்துநாலே. (௪௧)

சன்னியும்பதினெட்டாகுந் தான்வலிநேத்திரந்தான்
உன்னியதொண்ணூற்றாறு முழவையுமூன்றதாகு
மின்னியபக்கசூலை மேவிடுமேழதாகும்
சென்னியில்வீக்கந்தானுஞ் சேர்ந்திடுமைந்துதானே. (௪௨)

பிளவையில்சிலந்திதானும் பெருத்துடனைம்பதாகும்
அளவிலாச்சுரமேகேளு வறுபத்துநாலதாகும்
களமிகப்படுத்தும்பாண்டு தானுமேயஞ்சதாகும்
இளகியகுன்மமெட்டு மேந்தியவிக்கலாமே. (௪௩)

இந்திரகோபதோஷ மிருபதுமெழுபத்தாறும்
அந்திரவாயுதங்கை யாயிரத்தெட்டேயாகும்
தந்திரப்பார்வைதோஷந் தானுமேநூறதாகும்
மந்திரக்குழியெட்டு மகோதரமீரெட்டாமே. (௪௪)

படுவன்முப்பத்திரண்டு பருவோருநாற்பத்தொன்று
முடுகிடும்விஷபமாறு முற்றுமேமவுசிமூன்றுந்
திடுகிடும்பிலிமூன்று சிரசினிற்சிலந்திசொல்லில்
கடுகிடுமைம்பத்தாறு கரப்பானுமெண்பத்தைந்தே. (௪௫)

திருக்குலோபென்பதாகுந் திரளும்விப்புருதியததாம்
மருக்கவேகிராமணிதோஷ மாறுமேயிருத்தொன்று
மிருக்கிடும்பிளவைதானு மேழெனுமிவைபேசொல்லில்
கருக்கிந்ததோஷந்தானுங் கர்ணுமேநாற்பத்தாறே. (௪௬)

குட்டமும்பதினெட்டாகுங் குறைநோவுமெட்டதாகும்
திட்டமாஞ்சூலையெட்டுச் சித்தியலாறதாகுந்
தட்டுசீரிழிவுசொன்னோந் தானுமேயிருபத்தொன்றும்
சிட்டமாம்விஷயமைந்துஞ் சேருங்காமாலையாறே. (௪௭)

மேகமுமிருபத்தொன்று மிகுபோனிச்சூலையெட்டுந்
தாகமுமாறதாகுந் தனிரத்தபித்தமூன்றுஞ்

சோனகயுமொன்றதாகுஞ் சூசிகாவாய்வுபத்தும்
ஆகத்தில்வீக்கமொன்பா னரையாப்புமூன்றலாமே. (சஅ)
ஆனதோர்நரம்பரோக மாயிரத்தொருநூற்றென்னும்
ஈனமாங்குந்திரந்தா னிருபதுபன்னிரண்டு
தானமாஞ்சாண்டில்ரோகந் தானொருமூன்றதாகும்
கானமாங்குழலினூளே கசரோகமூன்றதாமே. (சகூ)
எலும்பினிற்பத்துரோக மீனொன்பதென்றுசொல்லுங்
கலங்குமேபெருவயிற்றில் கலந்திடுநூற்றெட்டென்னுங்
குலுங்குமேதலைநோக்காடு குறித்திடுமைம்பத்தொன்பான்
நலங்குசேர்தலையினுள்ளே நாற்பதுரோகந்தானே. (ருய)
மூன்றுமேயுகாரோக நூற்றெட்டுநாற்பத்தென்னும்
பற்றியநாக்கில்ரோகம் பன்னிரண்டாகுமென்னச்
சுற்றியகண்டமாலை சொல்லியதெட்டதாகும்
மற்றுமாநேத்திரரோக மைந்துடனாலதாமே. (ருக)
காதினில்வியாதிகாணுங் கருதிடுமிருபத்தெட்டும்
மார்பினில்நோயைத்தாகு மற்றொருநாலதாகும்
மாதியாநெற்றிரோக மஞ்சனுமோரிரண்டு
சோதியேயுதிரமண்டெலி சொற்படியிரண்டதாமே. (ருஉ)
புண்ணினிற்சன்னியைந்து பொருந்தியவாழ்நீரைந்து
கண்ணியநாசிரோக நாலொடுமூன்றுமென்னத்
திண்ணியவாதமெட்டுஞ் சிரங்கணாலதாகும்
பண்ணியரோகஞ்சூழ்ந்து பாரிடும்வாறதாமே. (ருங)
தூயதக்சுவாசமைந்து கதித்திடும்பவுத்திரமெட்டு
மாயமாமுனிவன்சொன்ன மூலமுமாறதாமே
சாயமுங்குட்டச்சிலந்தி தானொருமூன்றதாகும்
மாயமாமுனிவன்சொன்ன மூலமுமாறதாமே, (ருச)
தேகத்தில்கழிச்சலைந்து திகழ்முலைக்குத்துநாலும்
வகுத்தினில்புழுவேகேளு வளர்ந்திடுமிருபதென்ன
மெகத்திடுமூச்சுவாத மெய்யதேநாலாமென்ன
பகைத்திடுபதமிரண்டு பாய்ந்தபீநசமுநாலே. (ருரு)
மூத்திரக்கழிச்சல்நாலு முந்துநீரடைப்புநாலு
மாத்திரைப்பாதசக்கரம் வந்திடுநாலாமென்னச்
சத்திரப்படியேசொன்னேன் தந்தத்தில்வாயுவெட்டு
சூத்திரப்படியேயண்ட வாயுவுமேழதாமே. (ருசு)

மாந்தமுமெட்டதாகு மயக்கிடுமூர்ச்சையாகும்
சேர்ந்திடுபிள்ளைதோஷஞ் செப்பிடில்நூற்றெட்டாகும்
வளர்ந்திடுமடந்தாய்வாத சுரோணிதமேழதாகும்
தாழ்ந்திடுங்கண்ணரோகந் தாமெஞுருவைந்தேயாகும். (௫௭)

அட்டையின்கடியின்மூன்று மாணையின்கடிகள்மூன்று
நட்டுவக்காலிரண்டு நல்லதோர்விஷமூநாலு
தட்டிடுஞ்செந்தாமதானுந் தாக்கிடும்விஷமுமைந்து
மிஷ்டமாமெலிவிஷங்க ளீரொன்பதென்றுசொல்லும். (௫௮)

வேறு.

சேளாக்கடிவிஷமுமூன்று சேர்ந்தமாணுபவிஷமஞ்சு
நாளாய்நரிகடியொன்றுகு நலமாங்கருவாய்விஷமூன்று
கேளாயெரும்புவிஷமைந்து மெருவாரக்கடிமூன்று
தோளாஞ்சுந்தரிவிஷமூன்று திரிக்கபுலிவிஷமைந்தாமே. (௫௯)

வேறு.

எரிபுலிகடியேயெட்டு ஏனத்தின்விஷமிரண்டு
கரிபுலீர்க்கடிதானுங் கடித்திடும்விஷமிரண்டு
பரிவுள்ளகுரங்குமந்திப பலகடிவிஷமுமூன்று
விரிவுளசிறுபாம்புதானு மேவியேவிஷமுமூன்றே. (௬௰)

பூனையின்கடிகளரண்டு பேய்நரிவிஷமிரண்டு
சேனையிலுயுத்தஞ்செய்து தெரித்திடுங்குண்டுகாயம்
மானையேவென்றகண்ணாய் வல்லயக்குத்துக்காயம்
மீனையேகேளிபொன்று விலாங்கதுமொன்றதாமே. (௬௧)

பீரங்கிக்குண்டுக்காயம் பெரியதோர்குத்துக்காயம்
கூரம்புபட்டகாயங் குலைப்படுவெட்டுக்காயம்
பாரங்கம்தன்னிற்சென்று பறைபெறக்குடலைப்பீறி
சூரங்கள்பண்ணிபபீறிச் சூரியல்வகுத்தகாயம். (௬௨)

இப்படிமுதல்வலிப்பு எழில்மூன்றும்வகையாய்ச்சொன்னேன்
செற்படியழித்துசெய்யி லதுவகைநாலாயிரந்தான்
ஒப்படிநாடிதானுங் குணங்களும்வருகும்வாறுஞ்
செப்படிரண்டுங்கொள்ளத் திருவுளமருளிச்செய்தார். (௬௩)

நாடிதானியம்பக்கேளீர் நயமுடனிந்துநீயும்
வாடியமண்ணுள்ளோர்க்கு வரும்வினைவியாதியாகிக்
காடியவியாதிதானுங் கதித்திடுங்கடினஞ்செய்யும்
கூடியவுலகோர்செய்கை தொகுத்துநானுரைக்கிறேனே. (௬௪)

உற்றதோருடலிற்கூறி உறுப்புடன்விரவிநின்று
முற்றுமேநோய்களெல்லா முதிர்பெறத்தோன்றும்பே
பற்றுமேவாதபித்த சிலேற்பனந்தன்னிலொன்றை
பற்றியேதோன்றுமென்று பகர்ந்தனரமுனிவர்தானே. (கரு)

குருநாடி.

கூர்வார்வேதநாதன் குருநாடிநேர்மையெல்லாம்
விறுசெய்யுடலில்லாத பித்தமேதவேற்பனமூன்று
வாறுகண்டறியும்வண்ணம் வழுவாதநாடியொன்று
பேறுகொண்டெழுந்தநேர்மை பிரித்துடனுரைத்தார்மேலோர். (கசு)

ஒருயிரைச்சேர்ந்துவுட லிடைவம்மைத்தோற்றி
ஓரெழுத்திராயிரநாடியே யிசைந்துபின்னுங்
கார்செறிமேகம்போலே கதித்தடும்வியாதியெல்லாம்
பேருகொண்டெழுந்தநேர்மை பிரிதியாய்க்கேழ்க்கின்றேனே. (கஎ)

கேட்பதோர்வசனந்தன்னைக் கிருபைவைத்தடியார்க்கின்னம்
தாப்புரவகைகட்கெல்லாந் தனித்தனிகுணம்லெவ்வேறு
கூர்ப்புறவின்னதென்று குருவருள்செய்யவேண்டும்
ஆர்ப்பனதெளிந்தான்று யருடசெப்வீரமரர்கோவே. (கஅ)

வேறு.

நணுவதோர்பிணிகள்வந்தவகைதானேது
நாடிசைந்திருந்தவிதம்நடுத்தானேது
அணுகியிருந்தெழுந்துவரும்நகைதானேது
ஆகவொருமுடிப்பிருந்தநலந்தானேது
பணிதியொடுவேரிருந்தபதிதானேது
பார்வைகுருடானபின்புவிருள்தானேது
தணிவுடனேபொருளிதனைக்குறித்துச்சொல்வீர்
சண்டாளப்பிணிகள்வந்தநலத்தைக்கூறே. (ககூ)

நணுகியதோர்பிணிகள்வந்தவகையேதென்னில்
நாடிவெகுப்புசிப்பருந்தல்நயத்தினாலே
சிணுதும்பெருந்தாபமறுமபிணிகள்மீறும்
தினமரிந்துதின்பிராயில்பிணியோயில்லை
சொணுதுடனேஸ்திரீபோகஞ்செல்வீராகில்
கொடியபிணிமிகுதிவருங்குறையுந்தந்து

வணிவறிந்துபொசிப்பருந்திப்போகஞ்செய்தால்
வல்பிணிகளவரிடத்தில்வாராதென்றே. (எ0)

நாடியிசைந்திருந்தவிடந்தசைநீர்கூடி
நாட்டமிடைபின்கலையுஞ்சுழிணையும்பற்றி
தேடுபுனற்றீயோகோற்றுங்கூடிச்
சேர்பித்தவாதமெனச்சேருமூவர்
ஆடியதோர்மாலயனுமாகுமப்படியே
வாதபித்தசிலேற்பனமும்நேர்மையாடும்
ஓடிவருங்கரங்கடன்னிலுறுதியாக
வுற்றுநிற்குநாடியொன்றுகர்துபாரே. (எக)

மூலமுதலாரமாறுஞ்சுற்றி
மூர்த்திநின்றபரவெளியில்தன்மையாகி
பாலமிதுமீதேறிச்சுழிணையூநி
பாதாளநாடியங்கிபதியும்வேறு
காலமதுவரும்போதுகவரும்விசம்
கத்திரிக்காய்போனருக்குங்காலைப்பற்றி
சிலமுடனொடுக்கம்வருங்காலந்தன்னில்
தெசவாயுபாரித்துஅலைக்கும்வேளை. (எஉ)

அய்யாறுமாறுமங்கேயசைந்துபோர்ந்து
அண்டபகிரண்டமெல்லாமதிர்ந்துசாய்ந்து
மெய்யாறுதட்டுமங்கேபிடிந்துவிழும்
வேரிளகிப்போம்போதுபிராணன்போகும்
பய்யாறும்பரவெளியுமிரண்டுபோகும்
பரமனாரங்கிருந்துபகரும்போது
வெய்யேறுரவியும்போமிருளுமாளும்
வேரிழைத்தவகையிலொன்றுவிளம்பலாமே. (எங)

விளம்பலாம்வேரிருந்தளத்தினூடே
மேவிநின்றபரவெளியிற்சமானமானத்
தளம்பெறவேகட்டிவைத்தமடிப்புமங்கே
சற்குருவின்வைப்பெடுத்தலமுமங்கே
வளம்பெறவேவேரிருந்தவிடத்தைக்கண்டால்
மன்னுகுருபரனருளேமருவுங்காலம்
மனம்பாசபசுபதியுமொன்றுங்காலம்
மார்க்கண்டநாதனென்றுவகுக்கலாமே. (எச)

வேறு.

விளம்புறேன்விபரமாக வினவியகிரந்தத்தாலே
வளம்பெறுமுப்பாவத்தால் மறுவியபிணிகள்தீரும்
உளம்பியமனத்தாற்சிந்தை உயர்பெரும்பெரியோர்தன்மை
களம்பெருநிந்தைசொன்னாற் சார்ந்திடும்பிணிகடானே. (௭௫)

குருவருள்விம்பச்சென்று குவலயத்துள்ளமாந்தர்
திருவுளமனதிற்கற்றுத் திருத்தியேவேண்டிக்கொண்டு
கருவினையறியாமூடர் கற்றோரைத்தூஷணித்தல்
குருவினைநிந்தைசொல்லக் கொடும்பிணியாலேமாள்வாய். (௭௬)

கற்றதோர்வித்தைபோச்சு கருத்ததுமயங்கிப்பின்னும்
உற்றதோர்வறுமையாகி யுலகுளோர்நகைத்துப்பேசி
பித்தமும்பிரமைகொண்டு பேருலகதனிற்சென்று
சித்தமுந்தெளிவுமாறித் தெருவினிற்கிடப்பார்தானே. (௭௭)

குருவினைவணக்கஞ்செய்து கோணமற்பொருளையீந்து
இருவினையறுக்கவேண்டி யெனக்குருதெய்வமென்று
ஒருவனுந்தருவையெண்ணி யுற்றனைகொள்ளும்போது
அருவினைபகனறுநீங்கி யமருலகடைவர்தானே. (௭௮)

என்றதோர்சொல்லைக்கேட்டு மின்னமும்பயம்வேண்டும்
நன்றுதானடியேனென்று நவிலுலகுள்ளோர்க்கெல்லாங்
குன்றுபோலெழுந்தரோகங் குலைந்திடவகைகான்
கன்றுதான்பசுவைத்தேடிக் கருதிடுமார்க்கஞ்சொல்லே. (௭௯)

வேறு.

நாடியென்றால்தசநாடிபத்துண்டாகும்
நலமுடனேயோர்விதனுக்கைக்குகாணும்
கூடியங்கேகைவிரலுங்குவிந்துநிற்குங்
குறிப்பறிவீரொருநாடிகுசல்களெல்லாம்
ஆடிநிற்கும்விரலைந்துமொன்றுக்குள்ளே
அதனுடையசூட்சநிலைவாதவீட்டில்
சாடிநிற்குமூவிரலுமுருவிப்பாய்ந்து
சாதகமாய்நிற்குநிலைதன்னைப்பாரே. (௮௰)

மூலமுதலாதாரமாறுஞ்சுற்றி
மூர்த்திநின்றபரவெளியில்முனையினூடே
பாலமெனுமீதேறிச்சுழினைமற்றிப்
பதிந்துநிற்குங்கத்தரிக்காய்மாறல்போல

சிலமுடன்தசநாடிப் பத்துமொன்றாய்ச்
சேர்ந்துநிற்கும்நாடிநிலை தேர்ந்துபாக்கின்
ஞாலமதிலின்னதென் றறியலாகும்
நாதாந்தகுருவருளை நாடிப்பாரே. (அக)

அணுகிவரும்பிணியேதென் றறியவேண்டி
லாதாரமென்றதொருசிரசில்வேரு
பணுகியேயீரலிட வகுப்புதன்னில்
பற்றியதோர்வேரதினால் பதியும்நோய்கள்
மணுகியேமூலமதில் குடலிற்பற்றி
மருவியதோர்வேவுகொண்டால் பிணிதான்மீறும்
நணுகியதோர்வாதபித்த சிலேற்பனத்தாலே
நவின்றகுணமிம்மூன்றல் நாடுங்காணே. (அஉ)

தண்ணீரால்நெருப்பதனாற் கனத்தினாலுஞ்
சார்ந்தபிணியின்னதெனநம்பிப்பார்க்க
உண்ணீரால்முதநிலை தனைச்சார்ந்த
யுற்றுநிற்குஞ்சிலேற்பனந்தா னுறுதியாக
இண்ணீராற்கூர்மமென்ற ஈரல்தன்னில்
இசைந்துநிற்கும்பித்தத்தின் சுரங்கள்சூலை
பண்ணீரால்மூலமென்ற குதத்தைப்பற்றிப்
பரவியேநிற்குமது வரவுமாமே. (அங)

ஆதாரமாறுக்கும் நடுவேநின்ற
வப்பற்றிஅலம்புரு நாடியங்கேயசைய
கேதாரமூலத்தே யிருந்தநாதங்
கிளர்ந்துமெள்ளவூடுருவிமேலேசென்று
பாதாரவிந்தமங்கே கழுனைதாக்கிப்
பற்றிநின்றதசவாயுமொன்றாய்ச்சேர்ந்து
சூதானவீடுதான் தன்னிற்சென்று
சூடிசநிலைநின்றவிடமுடிச்சதாமே. (அச)

முடிச்சென்றநரம்பெல்லாம் பிடரிற்சுற்றி
மும்மண்டலங்களுக்கு முதலாய்நின்று
துடிச்சவகைபிராணனோ டபானன்றானுந்
தோன்றிடுமேலாதார மாறுஞ்சுற்றி
வடிச்சிநின்றவாய்வங்கே யபானன்பற்றி
மார்க்கமதுபலவிதமா யங்குக்கும்வேரை

தமித்திருந்தபிராணனங்கே பேருமென்று
சாற்றினார்மலைமுனிவர் தரணியோர்க்கே. (௮௫)

வாதமிருந்தெழுந்துவரும் வகைதானேது
வரிசையுடன் காதுநிலை வகைதானேது
பேதமுடன்பயித்தியங்கள் பிறந்ததேது
பிரமேகம்நீர்க்கடுப்புப் பொருள்தானேது
தாதுவருஞ்சயித்தியங்கள் பிறந்ததேது
சாதுரியமகாதோஷம் வாய்த்ததேது
ஓதிவெகுசாத்திரங்கள் படிக்கும்பேரை
யுறுதியுடன்பொருளிதென் றுரைத்தான்சொல்லே. (௮௬)

வாதபித்தத்துக்கு விபரம்.

வன்னிபொடுகோலகுடி மண்ணைச்சார்ந்தால்
வாதமிகுமண்மிசையில் வாயுமீறும்
திண்ணமுடன்வானதிலே காற்றுந்தீயும்
சேர்ந்திடிமேல்பித்தமிகுஞ் சீரைப்பாரு
உன்னிஎழுசிலேற்பனந்தான் தண்ணீர்காற்று
உறுதியுடன்சுழுமுனையி லுற்றுவாங்கும்
சென்னியருள்புகழ்படைத்த முனிவன்சொன்ன
சித்தாந்தமதாகவே தெளிந்துகொள்ளே. (௮௭)

வேறு.

சுழுனையும்பிராணன்தானுஞ் சுழன்றுதான்கலையச்சாரில்
களினமாந்தாதுவிட்டு கற்கயிறுகவீசும்
கொளுமுனைபோலேகம்ப மெழுகடலுச்சியேறில்
சுழுனையந்தாதுநின்ற மார்க்கமென்றறிந்திட்டாயே. (௮௮)

இருகரங்கால்பெறுத்து வுறுப்புகள்தன்னிற்சேர்ந்து
பருவமாம்பிராணவாயு பற்றியேயிடையுங்கூடிக்
குறிவெனப்பணிந்துபாணி தன்னையுமேற்கொண்டேதான்
மருவியசிலேற்பனசீதம் வருமெனவகுக்கலாமே. (௮௯)

அக்கியவுள்ளநாடியபானனொ டொத்துவாங்கில்
புக்கியமலசலாதி போக்கியமாகநின்று
வெக்கியமந்தந்தானு மிகுத்திடுபசியினாலும்
அக்கினிபெழுக்தபித்தம் வளர்ந்திடும்வகையிதாமே. (௯௰)

சன்னிப்பிறக்கும் விபரம் வேறு.

சன்னியிருந்தெழுந்துவருந் தலந்தானேது
தாதுவிழுந்தெழுந்திருந்த தன்மையேது
உன்னியொருசுரமிருந்த வகைதானேது
உட்காச்சல்பிரமேக வுகமையேது
பொன்னியொருபருப்பிளவை புடைத்ததேது
புகையிருந்தசலமிருந்த பொருள்தானேது
இன்னதெனப்பண்டிதரே வகைதானய்ந்து
இயம்புவீரிப்பொருளை யியம்புவீரே. (கூக)

சன்னியிருந்தெழுந்தவகை விபரமென்னில்
சாரமுடன்சிங்குவைதான் மூலஞ்சேரில்
வன்னியொருதண்ணீரும் வாயிங்கூடி
வழுதசிங்குவையகமோ டொத்துச்சார்ந்து
மின்னியெழுந்திடுவதுதான் சன்னியாகும்
பிரிவுடனேகாந்தாரி சுழுனைப்பற்றித்
தன்னிலதுதணலெழும்பித் தாதுவிம்முஞ்
சடத்துக்குப்பலங்குறையுந் தாதுதானே. (கூஉ)

ஏற்றமுள்ளவிடைநாடி கலையுஞ்சேர்ந்து
ஈடானவிஷநரம்பு தன்னிச்சாரில்
வாய்த்தவுடன்மாங்கிஷத்தில் வேவுகண்டு
வகையானவிஷநரம்பு மடங்கும்போது
சித்தமுடன்பவுப்பிளவை யுடைத்துப்போகும்
திறமானவிஷநரம்பில் தமருமுண்டாய்
சாத்தமுடல்சியும்ரத்தஞ் சலவுமேவுஞ்
சங்கையில்லாவெகுவாறு சலமும்போமே. (கூங)

சூலைவருங்குறி.

நாடியிருந்திருந்தவிஷ நீர்தான்கூடி
நாட்டமிடபிங்கலையுஞ் சுழுனையும்பற்றித்
தேடியதோர்புரைதீயுங் காற்றுங்கூடிச்
சேர்பித்தவாதமென்று சேருமூவர்
ஆடியதோர்மாலயனு மரணமாகு
மப்படியேவாதபித்த சிலேற்பனநேர்மை
ஓடிவருங்கபமென்னி லுறுதியாக
உற்றுநிற்குநாடியொன்று வுகந்துபாரே. (கூச)

சயரோகம்.

மாயமாய்ச்சயரோகம் வருமவாறேது
மாற்றுமொருபிசனங்கள் வகைதானேது

வியனாகச்சூலிருந் தெழுந்தபோது
விறுடனேநீர்ச்செறிப்பு விதனமேது
பயமாகக்கனவுநினை வுற்றசேது
பார்த்திருக்கக்குணமெழுந்த பகைதானேது
நயமாகப்பொருளதெண் ணும் வகைதானேது
நன்மையுடன்பண்டிதரே நடுவதனைச்சொல்லே. (கூ௫)

சயரோகமெழுந்தவகை சொல்லக்கேளீர்
தலைதனிலேகனலெழும்பி நீர்தான்வற்றி
மயமாகவிருபறமுந் தமருண்டாகி
மதுரமென்னும்ருசியறிந்து வாய்நீரூறிச்
சுயமாகமண்டையில் நீரிறங்கச்
சுவாசமதநெஞ்சில்வந்து கதறியோங்கும்
நயமறியச்சயரோகம் நடுங்குங்காலே
நன்மையுடன்பண்டிதரே நாடிப்பாரே. (கூசு)

பீனசந்தான்வரலாறு பொருளேதென்னில்
பேதமுற்றகனலெழுந்து வாயுசேர்ந்து
ஊனுருவிமண்டையிலே டொக்குப்பட்டு
உறுதியுடன்வாயுவங்கே யொத்துப்பின்னும்
பீனமுடனெருநீருஞ் சீயும்ரத்தம்
பிடித்துவருங்காற்றோடு மூக்கினோடு
காதுருவிவந்ததுபோல் சலங்கலங்கிக்
காயவிழும்பீனசத்தின் செய்கைதானே. (கூஎ)

சூலை.

சூலைவரும்வாறதனைச் சொல்லக்கேளுஞ்
சுற்றியதோர்விசைநரம்பில் வேவுகண்டு
காலையுமேயூடுருவித் தமர்தான்விம்மிக்
களிப்பதுபோல்மாசுபற்ற யிரத்தம்வற்றி
மாலையதுபோல்தொடுத்து நரம்பின்மீதே
வளைகயானவிசைநரமபை மடக்கிக்கொள்ளும்
கோலைவிட்டகுருடரைப்போல் தட்டழிந்து
குடிகெடுக்குஞ்சூலையது குறிகண்டீரே. (கூஅ)

குன்மம்.

குன்மதுதானெழும்பும் விபரமென்னில்
குடல்தனிலேகல்லுமிக நெல்லுமுக்கும்
பின்னமுடன்வயிறுப்பிச் சோறைச்சார்ந்தால்
புரளுவதுகுடலோடே மாடுபற்றும்
அன்னமதுசெரிக்காது மாசினாலே
அதுவுபாயவுமிழுக்குக் கிருமிபுக்கும்
வன்னமலைக்குயிலாமே குன்மரோகம்
மாசற்றால்குன்மமறு வகைதான்பாரே. (கூகூ)

சீர்பெறவேசீரிழிவு இரந்தானேது
  சேர்க்கையுடன்றொந்தத்தில் வியாதியேது
பாரறியக்கலுமியிறைற் புழுக்களேது
  பண்புடனேவாதங்கள் பகைத்ததேது
பேர்பெறவேமூலத்தின் கடுப்புமேது
  பீலமாகக்காமாலை பாண்டுவேதது
கூர்பெறவேகுறிப்பறிந்து சொல்லீரென்னக்
  கோமானேயிதுபொருளைக் கூறுவீரே. (௱)

சங்கையில்லாத்திரிபோகஞ் சார்ந்துயோசை
  தானுருவியஸ்தியிலே தொங்கிப்பின்னை
பொங்கியதூஆனுருவித் தசையைச்சார்ந்தால்
  புரைசித்துநாதமெல்லாம் பிரமைகெட்டு
கங்குலித்தபூப்போலே தேகமெல்லாங்
  காரியங்கேளுள்ளுலர்ந்து கார்போல்நீரைப்
பங்கிலங்கேவுரியிட்ட நீரையெல்லாம்
  பாழானவிஷரம்பைப் பற்றிச்சாயம். (க௦க)

ஸ்திரீபோகஞ்செய்ததினால் வேவுகொண்டு
  சிரசுமட்டும்வெந்துருகக் கனலேமீறிக்
குறியுடனேமேகந்தான் கொடுமைசெய்து
  குறைந்துவருந்தாதுவெல்லாங் குன்றிப்போகும்
நெறியுடனேபால்நெய்க ளிறைச்சிமீன்தான்
  நெய்ச்செத்தால்மிகுதிகொண்டால் நெருங்குமேகம்
அறிவுடனேதயிருமா மிசங்கடானு
  மடிக்கடியுண்பதுவு மேகந்தானே. (க௦உ)

சாகைவரலாறதனைச் சாற்றக்கேளு
  தருசுரத்தில்வாய்வெழும்பி யீரல்வெந்து
ஆகமெல்லாம்வெளுப்பேறி யிரத்தம்வற்றி
  அடிவயிற்றிற்கனத்துமெள்ளக் கூம்பின்பீதே
மோகமுடன் தாதுகெட் டுளமாந்தைபோல
  முட்டிவருங்கும்பதிலே வேவுகொண்டு
தாகமுறும்பசிதணிந்து கைகாலோயுஞ்
  சண்டாளகுணங்கள்செய்யுஞ் சோகைதானே. (க௦௩)

சோகைக்குணம்.

ஆதாரமாறுக்கும் நடுவேநின்ற
  அலம்புதசநாடியங்கே யசைவைப்பற்றிக்
கேதாரமூலத்தே நோக்கும்போது
  கிரிச்சனமாம்வாயுவங்கே கீழேநோக்கும்
சூதகத்தில்வேவுகண்டு சுழுனையூடே
  சுக்கிலத்தின்மலங்கனிந்து ஊனும்வெந்து

பாதாரமூலத்தி லடிக்கும்பின்னே
   பலவிதமாய்ச்சீழும்ரத்தஞ் சலமும்வீழும். (௧௪)

குருநாடி.

அந்தரமாயிடைநாடி சிரத்திலேற
   அப்பசுத்தூடுசென்று பாத்தைமேவி
சுந்தரமாய்வாய்வங்கே சிரத்திலூடு
   சுருக்கெனவேவிடையிரெண்டு நாற்றங்கொண்டு
தந்திரமாய்த்தொந்தத்தில் பதியும்நோய்கள்
   சலமுடனேசீயும்ரத்தந் தொந்தமாக
குந்திரமாயுடல்குத்து நோய்கள்செய்யுங்
   குறிப்பறிவீர்சிரச்சூலை குணமென்றோதே. (௧௫)

சீர்பெருகுநாயகனே வாயுபுத்திரா
   திறமானவத்திபென்ற நாடியோடே
பாரறியக்கடினமுறும வன்னியோடும்
   பண்புடையசிரசங்கே பதிந்துபோகும்
வார்பெரியவாயுவங்கே கபாலந்தன்னில்
   வகையானவிசைநரம்பை வளைத்துப்பற்றிக்
கார்பெருகிலரும்போலே யூனுருவிக்
   காற்றதனில்வந்தடைக்குங் கருதிப்பாரே. (௧௬)

நாடியென்றால்தசநாடி பத்துண்டாகும்
   நலமுடனேயோர்விரலி லிரண்டுநாடி
கூடியங்கேயைவிரலுங் குவித்துநிற்குங்
   குறிப்பறிவீரொருநாடி குசல்களெல்லாம்
ஆடிநிற்கும்விரலைந்து ஒன்றுக்குள்ளே
   அதனுடையகூட்சநிலை வாதவீட்டில்
நாடிநிற்குமாவிரல்முன் றுருவாய்ப்பாய்ந்து
   சாதகமாய்நின்றநிலை தன்னைப்பாரே. (௧௭)

நாடிநிலையறிய.

பரிரண்டுநிலைந்துக்கும் நடுவதாகப்
   பற்றிலன்றியலலாறு தன்னைப்பார்க்கில்
சிரான்றேபித்ததின் முன்னேநிற்கும்
   தெசநாடியத்துக்குந் தானாய்நிற்கும்
மேரென்றால்வாதமென்று சொல்வார்மூடர்
   மேவியங்கேபார்ப்பளவில் வேறாய்நிற்கும்
தார்கொண்டகுருநாடி தன்னையாய்ந்தால்
   தன்வந்திரியவனென்று சாற்றலாமே. (௧௮)

பேர்பெரியகுருநாடி குணமேதென்னில்
   புரண்டுவரும்வாதத்தி லட்டைபோலே
சீதியபிருமலிரு பத்தொன்றும்
   தினவுசெறிதிருதியுண்டாந் தேகம்வாடும்

சீர்தெரியபித்தத்தி லாமைபோலே
 தோன்றிடுமேல்சுரமிருக்குஞ் சுற்றும்வாழ்நீ
ரார்பெருகிவருவதுபோல் வேர்வைதோன்றுங்
 கதித்திடுமேல்நீர்கடுக்குங் கைகாலோயும். (௧௦௯)

சிலேற்பனத்திற்குநாடி சிங்கம்போலச்
 சிறிநிற்குமாமாகில் சன்னிதோன்றும்
ஆர்ப்பனத்தையூடுருவித் தோன்றுமாகில்
 அசாத்தியமாமானகுறி தப்பாதப்பா
கார்ப்பெனவேகுன்றுன்போல் குன்றிப்போகில்
 கழியும்வயிர்கடுப்பெடுக்குங் கைகாலோயும்
தேர்ப்பதுவுமில்லையில்லை திட்டஞ்சொன்னேன்
 தேர்க்குழிநாடிநிலை தோய்ந்துபாரே. (௧௧௦)

ஏற்றமுள்ளகுருநாடி தன்னைப்பார்க்கில்
 இடைகலையும்பின்கலையு மிசைந்துமாறி
மாற்றமில்லாச்சுழுமுனைதான் தன்னைப்பற்றி
 மாறிநிற்குங்கத்தரிகை மாறல்போலே
ஓற்றமுடன்தாதபித்த சிலேற்பனமொன்றே
 தெசநாடிபத்துக்குந் தானாய்நின்று
கோத்தசிறுகுருநாடி நிலையைப்பார்க்கில்
 கோமான்றிருக்கூத்தைக் கூறலாமே. (௧௧௧)

குருநாடி-உபதேசம்.

அகாரமுதலைம்பத்தோ ரெழுத்துந்தானும்
 அஞ்செழுத்துமெட்டெழுத்து மதுவேயாகும்
விகாரமுதனினைவிலொளி வதுவேயாகும்
 விதமுடனேயாதார மாறுமாகும்
உகாரமுடன்தத்துவங்கள் தொண்ணூற்றாறு
 மூர்ந்துநிற்குங்குருநாடி யொன்றும்போமே
சிகாரமெனுமட்சரத்தை நாடிவாசி
 சிவமென்றநிலையறிந்து தெளிந்துபாரே. (௧௧௨)

குருபதேசம்.

பார்க்கையிலேஐயுங்கிலியும் வசியமென்று
 பற்றிநின்றமூலத்தி லூன்றிநின்ற
ஏற்கையுடனெட்டெழுத்தை ஓம்ஆங்உங்ரங்யங்மசிவாவென்
 றிடைபின்கலையின் சுழுனையூடே
தாக்கையிலேசூரியன்போல் வட்டங்காணுந்
 தாடனையாய்நடனமிடுந் தலத்தைக்கண்டு
ஆக்கமுடனவிழ்ந்தங்க ளிவாயானால்
 அரகராசிவசிவா அறிந்துநோக்கே. (௧௧௩)

அஞ்செழுத்தைமாறியங்கே மாறிமாறி
 அஞ்செழுத்தைநெஞ்சில்வைத்து அருளைப்போற்றி

அஞ்செழுத்தைச்சடத்திலங்கை நிருத்திக்கொண்டு
  அருள்பெறவேயாயிரத்தெண் ணுருத்தானோதி
அஞ்செழுத்தையுருவேற்றச் சித்தியாச்சு
  அவுஷதமுஞ்சித்தியா மறிந்துநோக்க
அஞ்செழுக்தாற்கற்பமுண்ண யாக்கையழியாது
  அரகராவிப்புதுமை யருமைதானே. (௧௧௪)

இந்தமுறைசெய்வதற்கு மருந்துசித்தி
  இயல்பாகசடத்துக்குச் சுத்தியாச்சு
முந்தவேமந்திரத்தை வெளிவிடாதே
  முன்னுரைத்தநூலைப்போல் கொடுக்கவேண்டாம்
அந்தரத்திலெழுதாகில விழாதேநீ
  ஆருக்குமிந்நூலை யீயவேண்டாம்
வந்தவந்தசீஷருக்குக் கொடுக்கவேண்டாம்
  வார்த்தையின்றபகர்வார்தான் மெத்தவுண்டு
தொந்தமுடனுன்வயிற்றிற் பிறந்தபிள்ளை
  தொடுகுறியுஞ்சொல்லியுடன் கொடுக்கான்றே. (௧௧௫)

ஒன்றானசீஷனுக்கு நூல்தானீய
  ஒருதரம்போல்நூறுதர மனத்தைச்சோதி
நன்றாகமனதிருந்தால் தனத்தைக்கேளு
  நழுவியவர்போவரென்றால் நூலீயாதே
குன்றாகச்சொன்னதைத் தருவானாகில்
  கொடுத்திடுநீநூல்வாங்கு நலதந்தொன்று
மன்றானசீஷனுக்கு மந்திரமீயாதே
  மனந்தெளிந்துகசடற்றால் மந்திரமீயே. (௧௧௬)

அடுக்குமுதல்பொன்றநூவே னென்பார்கள்ளர்
  அவனுடைய கள்ளமெல்லாம் அறிந்துக்கொண்டால்
முடுக்கமுடன்வித்தையெல்லாங் கற்றுக்கொண்டு
  முகம்பாரான்பொருளீயான் முன்னேநில்லான்
கடுக்கெனவேவார்த்தைசொல்வான் வயித்தியங்கைவந்தால்
  காலன்வலைக்குள்ளாவார் கசட்டுமாண்பர்
துடுக்குடனேயவனிடத்தில் சொல்லவேண்டாந்
  துரோகியவன்படித்தவித்தை தூளாய்ப்போமே. (௧௧௭)

சீஷனென்றால்வகைகேளு தேன்போல்நெஞ்சந்
  தெண்டனிட்டுப்பணிந்துமே கையுங்கூப்பிப்
பாசமுடன்குருவெனக்குத் தெய்வமென்று
  பணிவிடைகளனுதினமும் பண்பாய்ச்செய்து
நேசமுடன்கனவிலுமே நினைவைவைத்து
  நிலைமையுடன்தான்சொர்னங் குருவுக்கீந்தோன்
வாசமுடன்குருகற்ற வித்தையெல்லாம்
  வளர்ந்துமங்கைமலைபோலே செல்வமாமே. (௧௧௮)

செல்வமுடன்வித்தையுண்டாஞ் சிறப்புண்டாகுஞ்
செகத்திலேகண் வர்க்குச் செல்வனுவான்
சொல்வதென்றால்வானவர்க்குஞ் செல்லுந்தூது
சொல்லுலகிலவனெனவுஞ் சுருதியாகும்
கல்வியென்றகல்வியெல்லாங் கருத்திற்றோன்றுங்
கனிவினில்வைத்தியமுங் கைக்குள்ளாகும்
நல்லவனென்றுலகமெல்லாஞ் சொல்வார்சொல்வார்
நற்குருவின்மனந்தெளிந்தால் நன்மைதானே. (௧௧௯)

திருட்டினால்வந்ததொரு சிஷன்றானுஞ்
செகத்திலேபொய்யுரைத்து மெய்பேசாமல்
மருட்டினால்குருதேடி வருவான்மட்டி
வார்த்தையினால்வாய்ஞானம் பேசிக்கொண்டு
உருட்டதனால்குருமனத்தை மருட்டிக்கொண்டு
ஒகோகோவித்தையெல்லாங் கைக்குள்ளாகி
குருட்டானமாபாவி குருவுக்கென்று
கொடுக்காமல்மனதெரியக் கொட்டினனே. (௧௨௦)

வித்தைதனைதிருட்டாலே வேண்டிக்கொண்டு
விதமறியுங்குருவாசான் மனதுநோக
சத்தியந்தான்மறந்துவிட்ட சண்டாளன்றன்
தாரணியில்மானிடர்க்கு மருந்தையீந்தால்
சித்திதான்வாராது பிணிதான்மிஞ்சிச்
செகத்திலுள்ளபேர்களெல்லாம் நகைப்பார்தானும்
முத்தியும்வாராது மகாநோய்கொண்டு
முறையானவவன்குடும்ப முழுதும்போமே. (௧௨௧)

நாடியிடஞ்சுநிலை பகுந்துசொல்வே
நன்மணிக்கடைநாலு விரலைத்தொட்டு
கூடியதோர்மணிக்கட்டில் விரல்தான்போட்டு
கூறுடனேமூவிரலுங் குவித்துப்பாற்கில்
தேடியதோராணுக்கு வலக்கரமேயாகுந்
திறமுடையமங்கையர்க்கு இடக்கரமேயாகும்
கூடியதோர்வாதபித்த சிலேற்பனத்துள்ளே
கொட்டிநிற்குங்குருநாடி திறந்துபாரே. (௧௨௨)

ஒன்றுக்குமெட்டாத நாடிநேர்மை
யூடுருவித்தாண்டிநிற்கு முண்மைகேளு
வண்டுதான்மதுவருந்து நேர்மைபோல
வாதபித்தசிலேற்பனத்தில் மதுவுண்டாற்போல்
என்றைக்கும்வாதபித்த நடுவேநிற்கு
மேறுவதுங்குறைவதுவு மில்லையென்றேன்

கன்றுக்குப்பால்சுரக்கும் பசுவைப்போலே
　காத்திருக்குங்குருநாடிக் காலைப்பாரே. (௧௨௩)

குருநாடிநிலையறியாக் குருடரெல்லாங்
　கூட்டமிட்டுச்சாத்திரம்பேய்க் குசல்களசெல்வார்
குருநாடிவாதபித்த சிலேற்பனமூன்று
　மத்திமமேதானறியார் வார்த்தைசொல்வார்
குருநாடிகுருநாடி யோகக்காணுங்
　கைம்முறையாய்க்கருத்தொருமை காட்டக்காணும்
பெருநாடிசாத்திரத்தி லேமயங்கிப்போவார்
　பித்தரேகுருநாடி பின்னல்பாரே. (௧௨௪)

வாதபித்தமிரண்டுக்கும் நடுவேபார்க்கில்
　மதுவுண்ணும்வண்டதுபோல் மத்தியத்தில்
போதமுற்றமூவிரலு முருவிப்பாய்ந்து
　பூரணமாய்மூலமுத லுருவிதாண்டிச்
சாதமுற்றவிஷநாம்பி னூடுசென்று
　சந்திரமண்டலமேவிச் சார்ந்துபின்னும்
நாதமுறைகுருநாடி பெங்குஞ்சுற்றி
　நடுவில்வரும்நோதனை நாடிப்பாரே. (௧௨௫)

நூலொன்றுந்தப்பாது கைகாட்டிக்கொண்டால்
　நூதனமாய்ப்படித்தவர்கள் நுழையமாட்டார்
வாலென்றுந்தலையென்று மறியாமூடர்
　வார்த்தையினால்மருட்டிவைப்பார் மற்றபேரை
சேலொன்றுமறியாத புத்தகப்பேய்
　சிங்கத்தைநரியெதிர்த்த செய்கைபோல
மாலகன்றகுருநாடி தானுஞ்சொல்லும்
　மற்றொருவரெதிரினில் வழுத்தாங்காலே. (௧௨௬)

குருமுறையாய்க்குருநாடி தொட்டுக்காட்டிக்
　கூறுகக்குருநாடி குலுங்கச்சொல்லித்
திருமுறையாய்மூவிரலுஞ் செய்கைசெப்பிச்
　சித்தாந்தவேதாந்தஞ் சடத்திற்காட்டி
மருள்நாடியிருள்நாடி யிரண்டுந்தாண்டி
　மாற்றமில்லாக்குருநாடி மதியுங்காட்டி
ஒருநாடிமூவிரலு முருவிநின்ற
　உண்மையறிந்தவர்க்குநீ யுரைக்கொணாதே. (௧௨௭)

பராபரமாய்குருநாடி பண்ணிப்பார்க்கில்
　பங்கமிட்டுக்கீழ்மேலும் பாய்ந்தநேர்மை
தராதரமாய்விரல்மூன்றுந் தன்னைப்பார்க்கில்
　சாதகமாயோர்விரலுக் கைந்துகாணும்

திராமயமாய்விரல்முனையு மிடமும்வாதம்
நின்றநடுபித்தமென நிறைந்துகாணும்
வராயகமேலேற்பவது வலமும்பின்னும்
வணைகபார்க்கில்மூவிரலுஞ் சேரைப்பாரே. (௧௨௮)

வேறு.

பின்னியமுன்கைகீழே மணிக்கடையதினுமப்பால்
மன்னியேபிரிமுறுக்காய்ப் பெலத்துமுக்கணமும்தோன்றிற்
சென்னியும்பிடரிற்சுற்றித் திசைதொறுங்கயிர்போல்வீசும்
உன்னியேயெழுபத்திரா யிரமுருமுற்றதாமே. (௧௨௯)

உற்றதோர்வாதந்தன்னி லுறுதியாய்க்கீழுமேலும்
நத்தியநாடிதானு நயம்பெறுமன்னங்கோழி
பற்றிடுமயிலும்போலப் படருநன்னாடியோடுஞ்
சித்துருமாமையட்டை தெண்டடனோந்திபோலாம். (௧௩௰)

சிலேற்பனநாடிதானுந் திரளுடன்சில்லூர்ப்பாம்பு
தாற்பெனத்தவளையூணி தயவுடன்சடுமாப்போல்
காற்பெறுமிவைகள்மூன்று நாடியின்குறிப்புகண்டு
ஆர்ப்பணத்தெளிந்துநீயு மறிவுடனமர்ந்துநோக்கே. (௧௩௧)

திருநாடிநேர்மைசொல்லச் சிவனயன்மாலுமாகுங்
குருநாடியானவாறுங் கூர்ந்திடுகருவிற்றோன்றி
வருநாடியைந்துந்தானே வகுத்திடும்பூதமஞ்சு
உருநாடிபத்துந்தானே யுறுபிணியேறிநிற்கும். (௧௩௨)

எழுந்திடுஞ்சத்ததாது இயல்புடன்சொல்லக்கேளீர்
வழுந்திடுந்தோலெலும்பு தசையொடுநரம்புபச்சை
அழுந்திடும்யாக்கைமுற்றி யானதோர்தாதுநேர்மை
குழிந்திடுமயிர்நெய்யோடு சுக்கிலஞ்சிறுநீராமே. (௧௩௩)

இப்படித்திசையினாடி யெழும்பியேயிடையினோடு
சொற்படிகலையுமாறிச் சுழினையுஞ்சுற்றிமாறி
முற்பனவீணையோடே மண்டலமூட்டியேங்கி
அப்படியத்திசிங்கி யலம்புடையுருடனாமே. (௧௩௪)

ஆக்கியநாடிதானு மறுநான்குமொன்றுமாகில்
தாக்கியகருவிலாகித் தத்துவந்தன்னைச்சார்ந்து
ஏக்கியவெழுபத்திராயிரம் நரம்பைச்சார்ந்து
கூக்கியபம்பரம்போல் குறுகிடுமசைவைப்பாரே. (௧௩௫)

பம்பரமீதிலந்தக் கயிறுதான்சுற்றிவீசித்
தம்பரமாகத்தானே கிறுகிறுய்சுற்றிநிற்கில்
அம்பரமானவாத மதுவெனவறிந்துகொள்ளு
நம்பரப்பித்தந்தானு நகோரரய்ச்சுற்றியோடும். (௧௩௬)

4

உன்னியே பெறிந்தபோது ஒருசுற்றுருண்டுசுற்று
மன்னியேசுற்றிவீழ்ந்தால் சிலேற்பனங்குருதியாகும்
நன்னியமரணம்பார்க்கில் நழுகிடுமுடனேவீழும்
மன்னியவயிறுபார்க்கி லப்படிவிசைசையைப்பாரே. (௧௩௭)

வயதுதானூறேயானால் மங்கையைமருவுநேரம்
சுகமதாய்சுக்கிலந்தான் சுறுக்குடன்முறுக்கியேறும்
கயிறெனத்தொய்யவீழிற் கண்டிடும்பித்தஞ்சாகும்
வயதிதுவிருபத்தஞ்சி வகுத்தறக்குறித்துப்பாரே. (௧௩௮)

ஒன்றுக்குமுக்காலாகி லூரமதுகுறைந்துசாடும்
மன்றுக்குள்தனிலத்தாளில் வயதுமிப்படியேயாகும்
துன்றுக்குள்பாதிக்குள்ளே தொய்யவேயருகிவீழில்
புன்றுக்குமாரத்தோன்றும் வயதெனக்குறித்துப்பாரே. (௧௩௯)

இப்படிபம்பரந்தா னேற்றமுந்தாழ்ச்சிகண்டு
அப்படிநாடி தானு மடர்ந்திடுஞ்செய்கையாகும்
முற்படிமுன்னும்பாய்ந்து முழுதுமேகுறித்துப்பார்த்து
சொற்படிசெய்வாயானால் நாடியின்றெருகுப்புத்தோன்றும். (௧௪௰)

வேறு.

குருநாடிதிருநாடி குறிதான்மேலும்
கொண்டபஞ்சநாடியென்றுஞ் சத்ததாது
திருநாடியானதுவே திறமாய்த்தேர்ந்து
சித்தாந்தகுருநாடிச் சீரைப்பார்த்தால்
வருநாடிபஞ்சபூத நாடியென்றும்
வகுக்கலாந்தசநாடி வகுப்புமெத்த
கருநாடிகுருநாடி யாகக்காணும்
கண்டவர்க்குமெஞ்ஞானங் கருதலாமே. (௧௪௧)

பம்பரம்போற்குருநாடி கிறுகிறென்று
பற்றிநிற்கும்வாதபித்த நடுவிற்றானே
அம்பரம்போற்குமிழியெனும் வாதபித்த
மையமெனுநாடிமுத லியாவுமோடிக்
கம்பமுதன்மண்டலங்கள் மூன்றுஞ்சுற்றிக்
கத்தரிகைமாறலெனக் கட்டிச்சேர்ந்து
தம்பமுடன்வாதபித்தங் கருவிற்பாய்ந்து
தமரகம்போலோடிநிற்குந் தன்மைதானே. (௧௪௨)

தொண்டையிலேசோறிறக்குங் குரலைநோக்கிச்
சூட்சமுடன்கையைவைத்துச் சுகமாய்ப்பார்க்கில்
கொண்டெழும்வாதமெனும் நாடிதானே
கோழிகுரல்போல்பார்த்தாலு மதுபோல்வாதம்
மிண்டையிடிக்காரர்தலை கையைவைத்து
வலைகயுடனேயரிப்பதுபோ லதிரும்பித்தம்

ஓண்டையிலேதவனை தனைப் பாம்புசென்று
 உறுதியுடன்தின்றற்போ லொக்குஞ்சிலேற்பம். (கசங)

முன்னுரைத்தநூல்களெல்லா மனைத்துஞ்சொன்னோம்
 முதுமொழிதான்கற்றவர்க ளறியலாகும்
நன்னூலாங்குருநாடி தேர்ந்தபேர்க்கு
 நடுவெளியே ற்றோர்ந்துசொன்னோம் நாடியெல்லாம்
கன்னல்மொழிமா தனக்கு எடுத்துசொன்னோங்
 கருதியேபார்ப்பளவில் கடினமெத்த
பின்னலாய்வெகுகோடி பிரித்துச்சொன்னோம்
 பாருடன்நீராராய்ந்து போற்றிக்கொள்ளே. (கசச)

குருநாடிவாதத்தில் நிற்கும்போது
 கொம்பசைந்தவாறொக்குங் கூர்ந்துபாரு
குருநாடிபித்தத்தில் நிற்கும்போது
 குயில்போலேவெதும்புமது-குறிப்பைப்பாரு
குருநாடிசிலேற்பனத்தில் நிற்கும்போது
 குளிர்ந்தசலம்போலிருக்குங் கூர்மைபாரு
குருநாடிமூன்றுக்குஞ் சரிபோல்நிற்கில்
 கோகோவெனக்குமுறுங் குணத்தைப்பாரே. (கசரு)

மரணக்குறிப்பு.

மரணமது அறிவதற்குக் குறிப்பைச்சொன்னோம்
 வழுவாசவிசைநரம்புகுலைந்துதானே
விரணமென்னும்பொறிகளெல்லாந் தளர்ந்துமெத்த
 விசைநரம்புதான்குலைந்து விரைந்துவாங்கி
காணமெனப்பற்கடித்து மணியுநட்டு
 நாவுலர்ந்துமூச்சடர்ந்து நடுங்கிக்காணும்
துரணமெனவ தபித்த சிலேற்பனமெல்லாந்
 துடித்துவரும்விட்டிலைப்போற் றுடிக்குந்தானே. (கசசு)

சன்னிபெழும்போதிலந்த நாடிமூன்றுஞ்
 சாதகமாஞ்சுழல்வண்டு தண்ணீர்மீதே
உன்னியதுசுற்றிவரும் போலேயோடி
 உள்ளிறங்கிப்படபடென முட்டியேறும்
மன்னியசிலேற்பனத்தில் நாடிதானும்
 வழுவாமலேதிரேறி வாதவீட்டில்
பின்னியதுவாதத்தை யழுத்தித்தாழ்ந்து
 பேதிக்கில்மரணமென்று பிரித்துச்சொல்லே. (கசஎ)

வேறு.

ஆத்திரமுவேதோன்றி விலங்கியேயகலுஞ்சீவன்
மாத்திரைமணியியம்போ லதுதோன்றிநிற்குஞ்சீவன்
வேற்றுருக்கண்களிரண்டு மணியதுநட்டுநின்றால்
யாற்றிரைமூன்றினுள்ளே யகன்றுபோமெல்லிநல்லாய். (கசஅ)

நெற்றியில்நரம்புரண்டும் நீலமாய்க்கவர்போல்தோன்றில்
அற்றிடுந்தேகம்விட்டே ஆறுமாத்திரையிற்சாவு
சுற்றியவளையம்போன்று சூழ்வாரதுதலில்நீளம்
பற்றியேகாணுமாகிற் பகருஞ்சுதிங்களேழே. (௪௪௯)

பத்தியாய்க்கண்டபனொந்து பதைத்துமேதுடிப்புமுண்டாம்
வற்றியேவெளுத்துக்காயும் வலையதுசுருங்கலாகி
இற்றியபுருவந்தாழ்ந்து புருவத்தின்மையட்நீளிற்
சத்தியமாதம்நாலில் தருணத்தில்மரணமாமே. (௧௫௰)

பெறுக்கவேமுகங்கறுக்கிப் புலால்போலாய்மூத்திரத்தில்
திருக்கைபோல்மடநல்லாளே திங்கள்மூன்றதனிற்சாவு
வருக்கவேமுகம்பெறுத்து வகையுடன்வெளுக்குமாகில்
மறுக்கவேதிங்கள்தன்னில் மரணமுங்காணுங்காணே. (௧௫௧)

முகத்தடிபெறுத்துக்கண்டு முகமெல்லாம்வெளுப்புமாகி
நிகத்தமாய்ப்புருவங்காணில் நெறியானமாதமிரண்டாய்
அகத்தினிலுணர்வுமுற்று மடிக்கடிசுவாசமூட்டில்
செகத்தினிலறியச்சொன்னோம் சீவனுமகலுந்தானே. (௧௫௨)

நாசியின்சுழியிரண்டில் நடுச்சுழியோங்குமாகில்
பேசியசிவன்விட்டேப் பிரியநாள்முப்பத்தொன்றே
மாசதுவிழிகள்மூக்கு வற்றியேகருத்துக்காணில்
ஊசலிலெதிர்த்தாற்போல உடம்பைவிட்டுயிரும்போமே. (௧௫௩)

வார்த்தைதான்செல்லும்போது மார்புக்குளடைத்தாற்போல
ஊர்த்தமாபெழும்பாதாகி லுயிர்விடுமாதமூன்றில்
சேர்த்துறைசெய்யிலற்ற திடமன்னர்தங்கள்போலச்
சார்த்தினேன்மாதம்ரண்டிற் சடத்துயரகலுந்தானே. (௧௫௪)

சொல்லிலேநாத்தடித்துச் சொற்றடுமாறுமாகில்
மெல்லநாவரட்சிகாணில் வீழ்வதுமாதமூன்றில்
மல்லெனவரைக்கவுந்தான் மந்தமாய்மக்கமாகில்
அல்லினுங்குழலாமென்றே யடைந்திடுமரணந்தானே. (௧௫௫)

மேனியுமிகபெருத்து விம்மியேகழிந்துபின்னும்
யூனிலாச்சோகமாகில் ஒருவருஷத்திற்சாவான்
பானநீருடலிற்ருவிப் பாவையினுடல்போற்காணில்
ஆனியாமாதம்பத்து வறுமாதமென்றுகூறே. (௧௫௬)

மெய்யெலாம்பசுமையாகி யிறைந்திடுமயமுமாகிக்
கையடிசுருங்கிக்காணிற் கருதுவெணமாதஞ்சாவான்
கெய்மயம்வேர்வைகண்டு நெஞ்சுயர்ந்திருபால்வற்றித்
துய்யதோர்ருபமாறில் துயர்வருமாதமாறே. (௧௫௭)

இருவிரல்மேலெலும்பு மிரண்டுமேயுன்னிக்காணில்
உரைசெய்யுமாதமூன்றி லுயிரதுமரணமாகும்

மருவியகண்டம்நீண்டு வற்றியேமிடருந்தாழ்ந்து
திரையெனத்தோற்சுருங்கில் செப்புவர்மாதம்ரண்டே. (௧௫௮)

பொருத்தெல்லாம்நெகிழ்ந்துகாணில் போர்கழன்றிருக்குமாகில்
துருத்தம்போலெய்ப்புகாணில் துஞ்சுவர்மாதமொன்றில்
குருத்திரள்நடத்தல்தன்னில் எழும்பவத்தியக்கங்காணில்
வருத்தமாய்த்துயரங்காணில் மரணமபத்திருநாளொன்றே. (௧௫௯)

காயத்திலடிசுருண்டு கருத்துத்தோற்சுருங்கிக்காணில்
பேயொத்தநிறமுமானால் பிரியுநாள்பத்திற்சிவன்
நோயற்றோரெனினுமேனி நடுங்கியேமார்புதாழ்ந்து
ஓய்வுற்றுப்பதறிக்காணி லொடுங்குமேயுயிர்நாளஞ்சில். (௧௬௰)

கண்டத்தில்நரம்பிரண்டின் கதிக்கவேவிரைக்குமாகில்
பிண்டத்தில்சீவன்விட்டுப் பிரியுநாளாறுமென்க
தண்டொத்துக்காரையேழுந் தடித்ததுவுயர்ந்துகாட்டில்
பண்டொத்ததருணத்தாலும் பகரிருநாளில்வீழ்வார். (௧௬௧)

உடம்பெல்லாம்பதறிக்காணி லுன்னடியுன்னித்தாளில்
நடந்திடில்கால்பின்சாயில் நாளொன்றிற்சாவாந்திண்ணம்
திடம்படவிருந்திலுந்தான் தேகமேகுறுகிக்காணில்
விடம்பயில்கண்ணினாளே வீழும்நாளஞ்சுதானே. (௧௬௨)

மலத்துடனெய்தான்போல வரிநீலம்போலேவீழ்ந்தால்
உலத்தியசடத்தைவிட்டு உயிர்நீங்குமாதமாறில்
கொலக்கொடியணங்கிநல்லாய் குமுக்கெனச்சோரைவீழில்
சலத்தகுமாதமஞ்சில் சாவதுவுண்மையாமே. (௧௬௩)

அரைத்தசோறதுபோல்வீழி லவிழ்தமுஞ்செய்யிற்றீர
திரைத்திடுந்திங்களொவி லேகிடுமரணமென்க
கரைத்திடுங்கூழ்போல்வீழ்ந்து கலங்கியேபொருமுமாகில்
உரைப்பதுமாதமூன்றி லொடுங்கிடுமுயிருந்தானே. (௧௬௪)

வெள்ளைதானிரைந்துவீழ்ந்து விலாவுள்ளேசொருகிக்குத்திச்
சுள்ளெனநெஞ்சிற்றுவில் துருவறமாதம்ரண்டில்
கள்ளெனத்துறையிற்றம்பங் கஞ்சிபோற்கழியுமாகில்
எள்ளிடுமாதமந்தத் தியல்பென்றுசொல்லுவாரே. (௧௬௫)

நினைக்குமுன்சுழியுமாகில் நீர்நிறங்கரியைப்போலத்
தினைப்படிசுழியுமாகில் செய்யுநாளிருபதென்க
பனிச்சலமன்னன்வீழ்ந்து பன்றிநெய்படர்ந்தொத்தால்
மனத்தினிலெண்ணவேண்டா மரணநாள்பதினாறென்றே. (௧௬௬)

குக்குடத்தேசம்போன்று குருந்தினையரிசிபோலும்
ஒக்கவேயிரத்தஞ்சீழு மோடிடில்நாள்பத்தாறும்
தொக்குளேசொருகிக்கொண்டு துருத்திரன்னம்வீழ்ந்து
மிக்கதோர்மயக்கமாகில் வீழும்நாளேழாமென்னே. (௧௬௭)

எடுத்திடுங்கழிச்சலற்று இறுக்கிப்பின்கழிந்துள்ளாகி
நடுக்கியேமயங்கிக்காணில் நவிலுவார்நாலஞ்சேதான்
உடைத்தகூழ்முட்டையேபோல் ஊன்வெடிநாற்றம்நாறில்
அடிக்கடிசுழியில்தானே யறுதிநாள்மூன்றதாமே. (கசுஅ)

பச்சிலையரைத்தாற்போலப் பலபலநிறமதைப்போல்
கெச்சிடினாற்றமாகக் கழிந்திடில்நிசமாய்ரண்டே
வெச்செனத்துப்பிக்கொண்டு மிகமலஞ்சுவாயம்போல
மிச்சமாவிகற்பமாகில் வீழுமநாளைறுதானே. (கசுகூ)

மண்டையில்சலம்போல்நாறில் மதுவெனநீர்தான்வீழில்
தண்டுளேயடைந்துவீழில் சாவுசொல்மாதம்ரண்டில்
கெண்டியில்நீர்போல்வீழ்ந்து கீழ்நுரையற்றகாலே
கண்டுகொள்மாதமேழிற் கழன்றிடுமரணமெய்யே. (கஎ0)

குறிப்படிஆய்ந்துநீரில் குளிர்ந்துதானறியாதாகில்
அறிவொடுகழியுமாசி லகலுநாளாறுமென்க
வெறிகமழ்மலர்ப்பூங்கோதாய் விளங்குமப்பலகுணத்தால்
செறியுயிர்மாளுமென்னச் செப்புவார்புவியுள்ளோரே. (கஎக)

இரும்பினில்மலர்ந்துகாய்ந்து எழில்முகங்கவிழ்ந்துக்கொண்டு
ஒருபுறஞ்சாய்ந்துகால்களுண்டியேமடக்கிக்கொண்டு
விருப்பொடுகருகிமூக்கு விரைந்துகைவைத்துக்கொண்டு
திருப்பியேதிரும்பிக்கொண்டு மருநதிடிற்சேர்வார்நோயில். (கஎஉ)

சார்ந்துகால்முடக்கிக்கொண்டு சந்தடியூடிகையைச்
சேர்த்திடவைத்துக்கொண்டு சிக்கெனக்கால்கள்கட்டிப்
பாய்ந்திடுந்தவளைபோலப் பரிவுடனிருப்பானாகில்
காய்ந்திடுவார்கள்நோயி லென்றுதான்முன்னூல்சொல்லே. (கஎங)

நடக்கினிற்சொரூபமன்றில் நடையதுதாழ்ந்ததாக
அடக்கமாய்நடப்பானாகி லகலினிற்றவர்வானாகில்
சடத்தொருபுறமேசாய்ந்து சத்தெனநடப்பானாகில்
திடப்படத்தெளிந்துகொண்டு நடக்கிலுஞ்சேர்வார்கோயில். (கஎச)

மலர்ந்துதான்கைகள்ரண்டு மார்பில்வைத்துறங்கலாலும்
நிலந்தனிற்கவிழ்ந்துகைகள் நெற்றிவைத்துறங்கலாலும்
பலந்தரவிழித்தாற்போலக் கிடந்துறங்குதலாலும்
மிளங்கிளையனைத்தாய்நோயில் விழுந்திடுவார்கள்திண்ணம். (கஎரு)

வாயினூறலாலும் வருந்திப்பற்கடிக்கையாலும்
தீயநேர்நெடுமூச்சிட்டுச் சேர்த்தநேராடிவன்னி
ஊயலாதுறங்கையாலு முருவகக்காலைபாலை
நேயமாய்த்துயில்வதாலு நிச்சயம்நோயிற்சாவார், (கஎசு)

மாலையில்நிசிகாலத்தில் வளர்விசைக்கடிகைதன்னில்
சாலவேபசியாம்போது சகசமாம்வேளைதப்பிப்

பாலெனுமமிர்தமன்னம் பண்புடனருந்துவோர்கள்
தூலமாய்நோய்க்குள்ளாகிச் சுழன்றுழன்றலைவர்மாதே. (௧௭௭)

சுடலையிற்கழுப்பக்கத்திற் சூழ்ந்தபேய்க்கூட்டந்தன்னில்
இடமுறுகலவிசேரா ஷத்திரிசாசஞ்சொல்லாம்
அடிமையாய்த்தெய்வமுற்றோர் மகத்துவமுள்ளோர்வார்த்தை
விடமெனத்தூஷித்தாலும் வீழுவர்நோயில்மின்னே. (௧௭௮)

மருண்டவர்போலப்பேசுஞ் சினத்தை.

மனதினிற்சூதையற்று வரும்பொறிகலக்கமாகி
நினைத்திடும்வெருட்சிகொள்ளில் நிறத்தசைவாயுவான
மனத்தைவைகுணங்கள்காட்டி லெழும்பலநோய்களென்ன
வனைத்தையுங்கருக்தஞ்சொல்லும் மகாமுனிகும்பன்சொல்வான்.

உரப்பவமும்மலத்தி னுற்றதோர்மலத்தைப்பற்றி
நிரப்பவலத்திலாய்ந்து நிலைப்பிலாமாகராவார்
அதப்பவம்மும்மலத்தை யடுத்துமேவசமாய்நிற்பார்
முரப்பவமலத்தின்மேவார் முன்னில்லார்கோயிலன்றே. (௧௮௦)

ஆணவமதனினாலு மறிவிலாமாய்கையாலும்
பூணுங்காமியத்தினாலும் பொதுப்பெருநோயில்வீழ்வார்
ஆணவம்பித்தமாசை யதுவாதமென்பார்மேலோர்
காமியஞ்சிலேற்பனமென்றுங் கருத்துடன்புகன்றதாமே. (௧௮௧)

சினத்தெழுங்கோபத்தாலுஞ் சிற்றின்பமிகுதியாலும்
கனத்திடுஞ்சுமைசுமந்து கருத்துவேறாகையாலும்
மனத்தெழுதுயரத்தாலும் வறுமைக்குளாகையாலும்
தன்வினைநோய்க்குள்ளாகி வேதனைபடுவார்நாளும். (௧௮௨)

அப்பங்கன்மானநாளி லைப்பசியானபோது
வெப்புறுவெளியிற்சென்றே விரைந்துதானடந்தநாளில்
செப்பியல்வாயார்போகங் கொள்ளவேநடந்தநாளில்
துப்பிதழ்மடவாரோடே தோய்ந்தவர்நோயிற்றோய்வார். (௧௮௩)

உண்டநீர்கொள்கையாலு முண்டபின்கொள்வதாலும்
தின்றவூன்குறைதலாலுஞ் சிறப்பிடுமெய்யினாலும்
நன்றியகல்விபோகம் நாளுமேகழித்தலாலும்
என்றுமேநோய்க்குள்ளாகி யிறந்திடுவார்கள்மாந்தர். (௧௮௪)

வியாதிகூறியநாடி.

இப்படிவருநோயான வெண்ணிலாக்கடலுட்சென்று
குப்புறவிழுமுன்னோடிக் கொள்பவர்மனிதரோகஞ்
செப்புவர்முனிதாமுன்னாள் செந்தமிழ்மாறிச்சூழ்ந்து
வப்பிணிலுணர்ந்தோர்சேர்வார் நமரென்னும்விண்ணில்மாதே. ()

வேறு.

சீர்மேகமானவர்க்கு நாடிதானும்
நிர்ணயமாய்நாடியெல்லாம் பொன்மைகெட்டு
கார்மேகம்போலவந்த பொறியின்மீதே
கழன்றுவிழும்பொறிபோல வோட்டிதானுஞ்
சீர்மேகஞ்செறிந்தகென்றால் கருதுநூல்போல்
சிறிநிற்குங்குருநாடி சேர்ந்துதானும்
போமேகங்கடுத்திடுகில் வாதபித்தம்
பின்னியதுதுடித்துவரும் பிரிவுதானே. (௧௬௬)

கெர்ப்பிணிக்குவாதபித்தங் கிளர்ந்துகாணும்
கிராணியதிசாரமென்றால் தளர்ந்துகாணும்
உற்பவித்தசயமிளை காசரோகம்
உற்றிடுசிலேற்பனந்தான் மீறிக்காணில்
கற்பிடித்தரோகமது கலிந்துகெட்டு
கவுலர்ந்துசயமிளை நாற்றம்ரோகம்
மற்பிடித்தவிஷநீருஞ் சோகைதானும்
வந்திடில்பித்தமுடன் சிலேற்பனமதாமே. (௧௬௭)

சிரரோகமானாலும் வாதபித்தஞ்
செறிந்துநிற்கும்நாடியது சிறித்தானே
விரரோகங்கிரந்திகுஷ்ட மானபேர்க்கு
மீறிநிற்கும்பித்தம்ரண்டு வாதமொன்றும்
தரரோகஞ்சூலையொடு வாதரோகம்
சார்ந்திடுகில்வாதபித்தந் தழைத்துக்காணும்
வரரோகம்வாயுவென்றால் வாதங்காணும்
வாகாகவின்னதென்று அறிந்துபாரே. (௧௬௮)

உற்றதோர்கபந்தனக்குச் சேரும்பித்தம்
உறுதிபெறுவிக்கலுக்குச் சேரும்வாதம்
மற்றதொருசுரந்தனக்கு வாதபித்தம்
வகையானகணைதனக்குப் பித்தம்வாதம்
சித்தமொருமதகரிக்குப் பித்தமாகுஞ்
சிரானகெளசிரோகந் தனக்குப்பித்தம்
குற்றமில்லையிதுமுறையைப் பகுத்துச்சொன்னோம்
கும்பமுனியருடனைநீ கூர்ந்துபாரே. (௧௬௯)

கரணிகத்தில்வாதமென்றால் சிலேற்பனவாதங்
கரணைசூலையானாலுஞ் சிலேற்பனவாதம்
விரணமுடன்நீர்ப்பாடு கோட்பாடானால்
விண்டிட்டநாடியெல்லாந் தளர்ந்துகாணும்
தரணமுறும்பாம்புவிஷங் கொண்டபேர்க்குந்
தாதுவெல்லாங்காணமற் றளர்ந்துபோகும்

அரனுனவடமொழிநூ லுரைத்தவாறு
அறிந்துரைத்தோம்வயித்தியரா மறிவுள்ளோர்க்கே. (௧௯௦)

கரணிகத்தில்சுரோணிதத்தின் வரதமானால்
கதித்துநிற்கும்வாதபித்தம் ரண்டிற்சேரும்
விரண்டுமொருமண்டைவலி வெடிசூலையாகும்
விகற்பமுடன்விஷநீர்கள் வறட்சிகாந்தல்
தருணமுறுமூக்கடைப்புத் தந்தரோகம்
சதையடைப்புச்செவிப்புற்றுப் பற்பரோகம்
மரணம்வரும்போதளவும் போகாதென்று
வயித்தியரேயிந்நூலை மகிழ்வித்தோமே. (௧௯௧)

முன்னாளிற்செய்தகுறை கர்மத்தாலே
முறையாவெளுப்புவருங் கர்மத்தாலே
இந்நூலில்விஷப்பூச்சி சென்னநாளும்
இசைந்தவட்டையுடன்விஷ மெறும்புதானும்
தன்னாளில்மிகுந்தபுழுக் குவிந்தசெங்கோன்
தான்கடித்தவிஷதோஷஞ் சாற்றக்கேளு
அந்நாளிறப்புடையமின்று மண்ணுளியுஞ்சீண்டி
லதினாலேவருநோயை யறையக்கேளே. (௧௯௨)

கால்தனிலேகடித்தாக்கால் திமிருண்டாகும்
கைதனிலேகடித்தாக்கால் விரற்குறுகும்
மேல்தனிலேகடித்தாக்காற் றடித்துக்காணும்
மேன்மையுடன்றலைதீண்டில் சிரங்குபுண்ணும்
பால்சொரிந்ததாடைதொடில் பொரிந்துகாணும்
பாதத்தில்தான்தீண்டில் சிரங்குபுண்ணும்
மேற்சிறந்தவிஷப்பூச்சி கடித்ததோஷம்
மெல்லியரேகுறைநோயென் றுரைக்கலாமே. (௧௯௩)

விஷப்பூச்சிதோஷம்.

பாழ்முறையால்குறைமுடிக்க வந்ததோஷம்
பாரிலுள்ளோர்பரிகாரஞ் செய்வதேது
ஊழ்வினையாலூடாடிக் கொல்லவந்த
உகமையதுவறியாமல் யூகஞ்செய்தாய்
தாழ்வினையூடறுவதில்லை கடினமாகும்
கற்றறிந்துபெரியோர்கள் கண்டுகொள்ள
ஆழ்வினைகளறிந்துமெள்ள வகன்றுபோவீர்
அரசருனையாரறியப் போகாதாமே. (௧௯௪)

விரல்குறுகுங்கால்திமிராம் விஷம்போலேறும்
மெய்யருந்ததலைசுழலும் வியர்க்குமேனி

பால்போலத்தேகமெல்லாந் தடித்துக்காணும்
பதருபோல்வெளுத்துமிகப் புண்ணுமாகும்
சரசமுடன்பொரிகரப்பான் போலேதோன்றும்
சத்தைதரும்விந்துகெடுந் தடித்துவீங்கும்
நாருலகிற்பூசைசெய்ய வேண்டும்சொன்னோம்
நாடிவந்தகுறைநோவு நாசிற்றுமே. (௧௧௫)

கற்புடையமங்கையரை விருப்புமுற்றுக்
கைம்மருந்திட்டுமிகக் கர்மத்தாலே
முற்பிறைபாற்குறைசெய்த கர்மத்தாலே
மூணுவதுபாவந்தான் சிலந்திபோலே
துப்புடனேசிலந்திவண்டு கடித்ததோஷம்
தொல்லுலகில்யாராலுந் தொலைக்கப்போகா
நற்புடனேயிதுவறிந்து பரிகாரங்கள்
நன்மையுடன்பவந்திரத் தவங்கள்செய்யே. (௧௧௬)

காகம்போல்தேகமது கறுத்துக்காணும்
கனத்தகடுவுடல்குளிர்ந்து தடித்துச்சுற்றும்
ஆகம்போலிரத்தமெல்லாம் வெந்துபோகும்
ஆக்கையுறும்பதனில்மிக வசைந்துபோகும்
கூசமதுகால்கரங்கள் நடக்கில்மெத்த
கொடியநீர்விஷகரப்பன் கொள்கைபோல
பேதமதுமுற்பிறைபால் மிகுந்தபாவம்
பெரியோரைதூஷித்த பேதந்தானே. (௧௧௭)

நல்லோர்கள்பெரியோர்கள் நடத்துஞ்செய்கை
நாட்டிலுள்ளதுஷ்டசனம் நகைத்ததாலே
பொல்லாதவிஷக்கடிகள் வந்துபுக்கிப்
பொன்மையுள்ளதேகமெல்லாங் குஷ்டம்போலே
செல்லாதவிஷகடிகள் விஷகுன்மம்பாண்டு
தீராதகன்மவினை செய்தபாவம்
எல்லாருங்காணவிது புவியின்மீதே
இணங்கிவந்தகடிவிஷந்த னியம்பலாமே. (௧௧௮)

ஆரறியார்பெரியோர்கள் செய்கையெல்லாம்
அம்புவியிலுபமானப் பொருளறிந்தால்
ஊரறியப்பேசறிய வுலகமெல்லாம்
உடனகைத்துச்சிரிக்கவென் றுலகப்பேய்கள்
சீரறியச்சிறியோர்கள் பெரியோர்தம்மை
சிரித்துநகைத்த வெகு பாவத்தாலே
கோரறியாவிஷக்கடிகள் போலேவந்து
நோய்ந்துபலவுற்பயாக நீசந்தானே. (௧௧௯)

உலகதனில்செவிடூமை குருடர்தாமும்
ஊக்கமிலாச்சப்பாணி மூக்கிலாதான்
நல்குமதுவிஷக்கடிநீர் குன்மம்பாண்டு
நத்திவரும்பெருவயிறு கவுசியீளை
இலகுமதுபெரியோரைக் கற்புள்ளோரை
எக்கமிலாச்சவஞானி பொருளுள்ளோரைத்
துலங்குமவர்தன்னைமிகத் தூடித்தாக்கால்
துர்ச்சனர்க்கிந்நோயைத் தொகுத்தார்தாமே. (௨௦௦)

வேறு.

வன்னியேமிகுந்துதானும் வாயுவைநெருக்கும்போது
உன்னியேயுதரம்விம்மி யுறுகுடல்வெந்துபின்னும்
பின்னுமேயங்கசூலை பெருத்துடனுதரஞ்சார்ந்து
துன்னியேவாய்வுமோதுஞ் சுரோணிதங்கெடுதியாகும். (௨௦௧)

கண்டத்தில்வாயுபுக்கிக் கபாலத்தைச்சூழ்ந்துகட்டித்
துண்டத்தில்மேல்ரப்பை சோரமுடல்சார்ந்துபின்னி
அண்டத்திற்கனலாய்ப்பற்றி யனலதுசிரசில்முட்டிக்
கொண்டுற்றகணித்ததின் சுரோணிதங்கெடுதியாமே. (௨௦௨)

நல்லதோர்நாடிதானு மிடையொடுசுழியும்பற்றிச்
சொல்லியகுதத்தினோடுஞ் சூட்சமாய்வினையினோடும்
வல்லபஞ்சேர்ந்துவன்னி வாய்வொடுகபமுஞ்சேரில்
சொல்லியமருந்துசொன்னோஞ் சொக்கியதவங்கண்டோமே. (௨௦௩)

மார்பினிலுதரந்தங்கி மருண்டுதான்கபத்தைச்சார்ந்து
வார்வொடுதளர்ச்சியுந்தான் வறட்சியுமிகவேகாட்டிச்
சீரொடுநரம்பினோடு திசையொடுமெலும்புசார்ந்து
பேர்பெருவனலில்ரோகம் பெருத்துருவிதங்கடானே. (௨௦௪)

அக்கினியெரித்தசூடு ஆகாரமாறும்பற்றிப்
புக்கியேநரம்புதானும் பொன்மயங்கெட்டேதானி
தொக்கியகபாலமுட்டித் துன்புறும்பரத்துமேவிக்
கக்குமாஞ்சோம்பல்ரோகங் கருத்துள்ளேகண்டுசொல்லே. (௨௦௫)

தாக்கியேமூலந்தன்னில் தருக்கியவாயுவோடே
நோக்கியேவன்னிதானும் நுவலியேயுதரஞ்சார்ந்து
தீய்க்குமாமலமுங்கட்டிச் சேரும்நீர்சுவறிவர
வாய்க்கியம்பேசஞ்சொன்னே மயக்கமாமூர்ச்சையாமே. (௨௦௬)

விஷக்கரப்பான் வேறு.

சங்கையில்லாவிஷக்கரப்பான் வரலாறேதுஞ்
சரசமுறுங்கிருமியுருந் தகைகமையேது

பொங்கியங்கேயூனூறிக் கிராணியேது
 பூராயவானதொரு பௌத்ரமேது
நங்கையர்கள்போகமுறு மேகமேது
 நவிலவொண்ணாக்கிரந்தியது ரோகமேது
கங்குல்பகல்வருங் காந்தலேது
 கருத்துடனேயிருந்தவகைக் கருமங்கூறே. (௨௦௭)

உஷ்ணமேமிகுத்துவரும் ஸ்திரீபோகத்தால்
 ஊனூருவியஸ்தியிலே வேவுகொண்டு
நட்டமாய்வந்ததொரு மச்சைதன்னில்
 நாட்டமுண்டாய்க்கிரும்தென்று நணுகும்போது
மட்டுறவேகிருமியெல்லாம் பறந்தங்கேறி
 வகையுடனேமாமிசத்தைத் துளைத்துமேவுந்
திட்டமுடன்விணிகரப்பன் பரந்துமேவித்
 தினவுடனேபாபரத்துத் தினவுண்டாமே. (௨௦௮)

சுக்கிலந்தானுட்டினத்தில் வேவுகொண்டு
 சூதானமலக்கட்டுக் கட்டுப்பட்டால்
அக்குலத்தின்மலமதிலே நாற்றமுண்டாய்
 அழுங்கியங்கேவெந்துருகி வாழும்போது
சிக்கிமலந்தான்புழுத்துக் கிருமியுண்டாம்
 தீபனங்கள்சென்றதனாற் கிருமியெல்லாம்
பக்கியங்கேபகுந்தேறிச் சரீரமெல்லாம்
 பரபரத்தூர்ந்தேறும் பகமையாமே. (௨௦௯)

வயிறதனிற்பூநாகந் தன்னைச்சார்ந்து
 வருந்தியதுபுற்றுப்போற் பற்றிகாணும்
எழும்பியதுகிருமிதா னிடைந்துபுக்கில்
 இயல்பெருகுங்குழல்மடவாய் சொல்லக்கேளு
கயிர்முருக்கிட்டாற்போல் தேகந்தன்னில்
 கறகறத்துச்சொறியாகிக காணுஞ்சீழ்நீர்
உயர்பெருகும்பண்டிதரே கரப்பான்செய்யும்
 உறுதிதனைநன்றாக வுணிப்பாரே. (௨௧௦)

கிருமினால்வருந்தோஷம் பெருகவுண்டு
 கேட்கிலதன்பிரிவுதன்னைக் கிரமமாகப்
பொருமிவரும்வாயுவெல்லாங் கிருமியாலே
 புழுக்கடிபோல்காண்பதுவுங் கிருமியாலே
செருமிவரும்பௌத்திரங்கள் கிருமியாலே
 தேகமதுசொறிகுட்டங் கிருமியாலே
துருமிவருஞ்சுரோணிதமுங் கிருமியாலே
 சூட்சமுடன்கிருமியதைத் தொழில்செய்வீரே. (௨௧௧)

குஷ்டமதுவிஷகரப்பான் விஷநீர்க்கோவை
கொடுஞ்சூலைசுரோணிதத்தால் தாதுகெட்டு
மட்டறவேகிருமிசென்று மருவும்போது
வகைவகையாய்க்கிருமியிட விஷநீர்சென்று
துட்டனந்தத்தேகமெல்லாம் பார்க்கும்போது
சுழிசுழியாக்கிருமிநீர் துன்னிக்கொள்ளுங்
கட்டுறவேகிருமியிட நீரில்வந்த
கருங்குஷ்டம்விஷகரப்பான் கருதிப்பாரே. (௨௧௨)

மலக்கிருமிநீர்க்கிருமி மஞ்சட்கிருமி
வாற்கிருமிகருங்கிருமி மண்டைக்கிருமி
தூலக்கிருமிசூறைக்கிருமி சுரோணிதக்கிருமி
துலக்கிருமிகணக்கிருமி தாதுக்கிருமி
சொலப்பெரியவாய்க்கிருமி பலக்கிருமியோடு
சுக்கிலத்தைசென்றறுக்குஞ் சூதக்கிருமி
புலக்கிருமிபுணக்கிருமி சூலைக்கிருமி
புகழ்வொன்பான்குணத்தைப் பிரித்துப்பாரே. (௨௧௩)

மலக்கிருமிகுடல்தனிலே மருவிநிற்கும்
மற்றதொருநீர்க்கிருமி விஷநீர்மேவுந்
தூலக்கிருமிநரம்பின்மேல் துள்ளிநிற்கும்
சுக்கிலத்தின்கிருமியது தாதுகேடாம்
வலப்பெரியவாற்கிருமி யுதட்டிசேரும்
மண்டையினிற்கிருமியது சிரத்திலேறும்
நலம்பெரியவாய்க்கிருமி யுதட்டிசேரும்
நயனமதுபற்றிநிற்குங் கிருமியாமே. (௨௧௪)

ரத்தமதுபொருந்துமந்த மஞ்சட்கிருமி
யியல்பானகருங்கிருமி யெங்குமேவும்
மத்தசிறகதின்மேவுஞ் சூரக்கிருமி
பரிவாகமீறிவருஞ் சுக்கிலக்கிருமி
அந்தணர்தம்பதம்போற்றி யறிவுள்ளோர்கள்
ஆராய்ந்துகிருமியறிந் தவிழ்தஞ்செய்யில்
சித்தியாம்வயித்தியரே தேர்ந்துபாரும்
திகழ்கிருமியாவுமெழுந் தேகும்பாரே. (௨௧௫)

புலக்கிருமிமூலத்தி லறுக்குங்கண்டாய்
புணக்கிருமிபுண்ணுக்கும் புகழ்ந்துசொன்னோம்
சிலக்கிருமிராக்ஷதர்போற் கிருமியேறுஞ்
சீரானகிருமியாவற்றுந் தேர்ந்துபார்க்கில்

நலக்குறியுங்குணங்கள்முதல் நன்றாராய்ந்து
நாதனிருதாள்போற்றி நன்மையாக
இலக்குரியபண்டிதரே கிருமிதானும்
இயல்பரிந்துபரிகார மேற்றுவீரே. (௨௧௬)

கிராணி வருமாறு.

கேளுமினிகிராணிவந்த செய்கைதானும்
கிருபையுடன்மூலத்தில் வேவுகண்டு
நாளுமிதுகிருமியினாற் குடலேதின்ன
நாற்றமுண்டாஞ்சுரோணிதந்தா னலமுங்கெட்டு
மீளுவதுவாயுவங்கே விரவிநின்று
மேவிடிற்கிருமியெல்லாம் விரைவில்தானே
வேளுமதுபலவிதமாய்க் கழியுமப்பால்
குடிகெடுத்தகிருமிசெய்த கிராணிதானே. (௨௧௭)

கிராணியதின்வரலாறு உதரந்தன்னில்
கிரிச்சனமாய்ப்புசித்துவரும் பதார்த்தத்தாலும்
கிராணியிடகுடல்தனிலே போடிகின்று
கிலுகிலென்றவாயுவங்கே யிரைச்சலாக்கிக்
கிராணியதுகொண்டுதான் வயிறூதிக்
கழியுமதுபொருமலமாய் விதம்வெவ்வேறும்
தராணியிடந்துர்ப்பலமா யலைச்சல்பட்டுச்
சலமலமும்பலவிதமாய்ச் சாயுந்தானே. (௨௧௮)

வேறு.

சொல்லுடன்குட்சநாடி சுடரொளிபோராற்காணி
வெல்லுவேன்புவியுள்ளோரை விதமுறுநூலினாலே
மல்லுவேன்சாஸ்திரத்தை வகைவகையாகப்பாடிக்
கல்லதைக்கரைத்தாற்போல நூல்கனாக்கருதிப்பாரே. (௨௧௯)

வேறு.

அகாரமுதலைம்பத்தோ ரெழுத்துந்தானாய்
ஐந்தெழுத்துமெட்டெழுத்து மதுவேயாகும்
விகாரமுடநினைவிலொளி வதுவேயாகும்
விகாரமுடனாதார மாறேழாகும்
உகாரமுடன்தத்துவங்கள் தொண்ணூற்றாறும்
உற்றுநிற்குங்குருநாடி யொன்றுபோலச்
சிகாரமெனுஞ்சடாக்ஷரத்தை மூலநாடி
சிவசிவாவென்றநிலை தெளிந்துபாரே. (௨௨0)

ஒன்றுக்குமெட்டாத நாடிநேர்மை
 ஊடுருவித்தாண்டிநிற்கு முண்மைகேளு
வண்கேருநேர்மைபோல் வருகும்பித்தம்
 மருவியேசிலேற்பனத்தில் மதிவுண்டார்போல்
என்றைக்கும்வாதபித்தம் நடுவேநிற்கும்
 ஏறுவதுங்குறைவதுவு மில்லைசொன்னேம்
கன்றுக்குபாலிறங்கும் நேர்மைபோலக்
 காத்திருக்குங்குருநாடிக் காலைப்பாரே. (௨௨௧)

வேறு.

உற்றதோர்வாதந்தன்னி லுறுதிபசய்க்கீழுமேலும்
பற்றியேமுன்றும்பின்னும் பதிந்துதான்பயணஞ்சார்ந்து
சுற்றியேவிசையினூடே சுழிமுனைதன்னைநோக்கும்
குற்றியேதம்புருவினை குறியெனக்கொள்கைபாறே. (௨௨௨)

நாடிடுந்தம்பூருதன்னில் நரம்பிசைகாணுந்தந்தி
கூடிடுந்தந்திதன்னைக் குறியெனத்தெறிக்குமாபோல்
ஓடிடுமசையில்நாடி யுன்னியேபதியவொன்று
சாடிடுநாடிதானுந் தான்குருநாடியாமே. (௨௨௩)

தந்திக்குத்தந்திவெவ்வேறு நாதமும்பலதரம்போலக்
குந்திக்குவாதபித்த மையமுங்கொள்கைபோல
வந்திக்கும்விதங்களெல்லாம் வகைபெழுதம்புருவினை
விந்தைதக்கும்விங்கணுடி விவரந்தானறிந்துபாரே. (௨௨௪)

மந்தமுஞ்சுருக்குஞ்சாந்தம் மதிதருங்கோபமேகம்
இந்துவைநாதம்போல விசைக்குமந்நாடிகண்டாய்
உந்தியவாதநாடி முழுதுமேசாந்தமாகும்
மந்தமாய்சேத்மநாடி மகிழ்கரைப்பித்தமாகும். (௨௨௫)

மார்தமுஞ்சுக்கிலந்தான் வகையுடன்வாதபித்தம்
முந்தவேசாந்தமேகம் முற்றிடில்வாதஞ்சிலேற்பம்
அந்தமாஞ்சார்தசீதம் அப்படிபதியுஞ்சிலேற்பம்
விந்தமாங்கோதுகோசம் விளங்கிடிற்பித்தஞ்சிலேற்பம். (௨௨௬)

நளினமாஞ்சாந்தங்கோபம் நாட்டியசிலேத்மம்வாதம்
கிளினமாஞ்சிறந்தசாந்தம் மேவிடிற்பித்தம்வாதம்
குளினமேகூடிமேவுங் குணந்தனைப்பிரித்துப்பார்க்கில்
தெளினமாம்நரம்பினோசை சென்னியில்கூர்ந்துபாரே. (௨௨௭)

இப்படியொன்றுமைந்து விதனுடனேழுமாகிச்
செப்பினோந்திசையில்நாடிச் செயம்பெறுங்குணங்களெல்லாம்
தப்புடனுரைகள்செய்தே னுலகினிலறியவேண்டி
வைப்புறுபொதிகைவாழு மருள்முனியுரைசெய்தீரே. (௨௨௮)

குருநாடியென்றுதானே குறிப்புடன்பதிதானுருந்
திருநாடிசொல்லக்கேளீர் சிவனயன்மாலுமாகும்
வருமோடிபஞ்சநாடி வகையுடனெழுத்தஞ்சாகுந்
தெருமோடிசந்தநாடி சனத்தொளிர்சதமெலும்பே. (௨௮௯)

சொல்லியநரம்புதானும் தோற்றுபின்கலையினேடு
வல்லிசிங்குவைகாந்தாரி வகுப்புடன்புருடன்தானும்
வெல்லியபிரமதேவன் விளங்கிடுமெத்தியோடு
புல்லியசிதாங்கனேடு போற்றுறுநாடியாமே. (௨௯௦)

இடையொருநாடிதானு மிசைந்திடும்வலதுகாலில்
அடைவுடன்சுற்றியேறி யமர்ந்திடும்வீணைத்தண்டில்
மடமயில்மானேயின்னு மிடதுகண்தன்னைநோக்கி
உடலிலன்வோடிநிற்கு முண்மையையறிந்துகொள்ளே. (௨௯௧)

பின்கலையானநாடி யிடதுகால்தன்னைப்பற்றி
மூர்த்தவேசுற்றியேறி வலதுகண்தன்னைமூட்டும்
தன்கலைசுழுனைநாடி மூலத்தைப்பற்றிநின்று
அன்பெனச்சுழுமுனையி லயர்ந்துதானஞ்சுண்டாமே. (௨௯௨)

அத்தியாம்நாடிதானு மமர்ந்திடுமெழும்பைப்பற்றி
சித்தியாஞ்சிங்குவைநாடி சேர்ந்திடுநாவைப்பற்றி
முத்திரைகாந்தாரிதானும் மூக்கினைப்பற்றிநிற்கும்
கத்தியேயலம்புரிக ணற்சதுரத்தில்நிற்கும். (௨௯௩)

பூமகள்புருடன்றானும் புரையறவுந்நிலாறும்
நாமகள்பிரமன்றானும் நாடியபாம்புசேரும்
கோமகள்சிதாகேவி கொடுமுடிமேவிநிற்கும்
வாமகளிவைகட்கெல்லாம் பொருந்துருவகையைப்பாரே. (௨௯௪)

சொன்னூர்நாடியிருநூறு தோற்றுமுப்பத்தைந்தினிலே
அன்னேதனக்குஅரனுரு மன்பாயெடுத்துத்தானுரைத்தார்
முன்னேராயுள்வேதமிது முழுதும்நாடிதானுரைத்தார்
பன்னேமார்தர்க்குறுதியுடன் பகர்ந்தார்முனிவர்முற்றுமே. (௨௯௫)

அகஸ்தியர் அருளிச்செய்த

குருநாடிசாஸ்திரம் முற்றிற்று.